www.padippakam.com

இந்து முன்னணியல்ல, பார்ப்பன முன்னணிதான் நிரூபணம்

15 டிசம். '95 ரூ. 3.50

# புதிய ஜனநாயகம்

## ஜெயா-ரஜினி மோதல் வித்தை காட்டும் கிசுகிசு ஏடுகள்




படிப்பகம்

www.padippakam.com

# திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு எதிரான இயக்கம்

திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு எதிராகத் தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன. மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து எடுத்து வரும் இவ்வியக்கம் எதிரிகளைக் குலைநடுங்க வைத்துள்ளது. சுவரெழுத்து இயக்கம் மற்றும் பொதுக்கூட்டங்களிலும் திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகள் வந்து தலையிட்டு மோதி குட்டுபட்டுச் செல்கிறார்கள்.

● திருச்சி - தாராநல்லூர் பகுதியில் 24.10.95 அன்று புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி சார்பாக நடைபெற்ற பொதுக்கூட்டம் எதிர்பார்ப்புகளையும் விஞ்சி சிறப்பாக அமைந்தது. தலைமையுரையாற்றிய பகுதி பு.மா.இ.மு. தோழர் சுப்பிரமணி, தாரா நல்லூர் பகுதியில் சாதிய (தேவர்) ஆதிக்க சக்தியும் கந்துவட்டி சுரண்டல் பேர்வழியுமாகத் திகழுபவனின் பெயரைக் குறிப்பிட்டு அம்பலப்படுத்தி பேசியது வெகுவாக பொதுமக்களை ஈர்த்தது. பேச்சைக் கேட்க கூடியிருந்தவர்கள் கூட்டத்தில் இருந்த அவனைச் சுட்டிக் காட்டத் தொடங்கவே, வேறுவழியின்றி அவன் உடனே அங்கிருந்து கிளம்பிவிட்டான். சிறப்புரையாற்றிய ம.க.இ.க. மதுரைக் கிளையைச் சேர்ந்த தோழர். வேம்பன், தமிழ்நாடெங்குமுள்ள திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளையும் ஜெயா கும்பலையும், ரஜினியையும் அம்பலப்படுத்திப் பேசினார். தோழர்கள் சத்யா, முத்து, கபிலன், சேகர் ஆகியோரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்கள். புதியவர்கள் அமைப்பில் இணையும் வண்ணம் இப்பொதுக்கூட்டம் மக்களைக் கவர்ந்தது.

● திருவெண்ணெய் நல்லூர் பகுதியில் வி.வி.மு. அமைப்பினர் அரசூர் கூட்டு ரோட்டின் அருகே திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளை அம்பலப்படுத்தி எழுதியிருந்த சுவரெழுத்தின் மீது திருநாவலூர் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. பன்னீர் செல்வத்தின் அடியாட்படை ரவுடிகள் அ.தி.மு.க. சுவரொட்டிகளை ஒட்டி மறைத்தனர். இச்சுவரொட்டிகளை வி.வி.மு. தோழர்கள் கிழித்துவிடவே, சுவரெழுத்தை வெள்ளையடித்து அழித்தனர், அந்த ரவுடிகள். சுவரெழுத்தினை மீண்டும் எழுத முடிவு செய்து 40 தோழர்கள் இணைந்து அரசூர் கூட்டு ரோட்டிற்குச் சென்ற பொழுது, அந்த ரவுடிக் கும்பலுடன் மோதல் ஏற்பட்டது. உடனடியாக இதனை அம்பலப்படுத்தி சுவரொட்டி இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

வி.வி.மு. சார்பாக 1.11.95 அன்று திருவெண்ணெய் நல்லூர் நகரத்திலும், 2.11.95 அன்று அரசூர் கூட்டு ரோட்டிலும், 7.11.95 அன்று விழுப்புரம் புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம் சார்பாக பனையபுரத்திலும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. அரசூர் கூட்டு ரோட்டில் நடந்த பொதுக்கூட்டத்தின் பொழுது பன்னீர் செல்வத்தின் ரவுடிகள் கும்பலாக வந்து மிரட்டிய வண்ணமிருந்தனர். அதையும் மீறி பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சியும் சிறப்பாக நடந்து முடிந்தது.

● திருப்புவனத்தில் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி சார்பாக 8.11.95 அன்று பொதுக்கூட்டமும் மக்கள் கலை இலக்கியக் கழக மைய கலைக் குழுவினரின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு பு.மா.இ.மு. தோழர் இராமு தலைமையேற்க, தோழர். மோகன் சிறப்புரையாற்றினார். கிட்டத்தட்ட 1000 பேர் பொதுக்கூட்டத்தையும் கலை நிகழ்ச்சியையும் காணத் திரண்டிருந்தனர். இடையிலேயே மழை வந்துவிட்ட போதும் அதைப் பொருட்படுத்தாது கிட்டத்தட்ட 400 பேர் இறுதி வரை இருந்து இயக்கத்திற்கு ஆதரவளித்தனர்.

● நெய்வேலியில் தொழிலாளர் பிரச்சாரக் குழு சார்பாக 28.10.95 அன்று பொதுக்கூட்டம் நடந்தது. பொதுக்கூட்டத்திற்கு தொ.பி.கு. அமைப்பாளர் K.P. லெனின் தலைமையேற்க, மக்கள் கலை இலக்கியக் கழகத்தைச் சேர்ந்த தோழர். குமார் சிறப்புரையாற்றினார். பொதுக்கூட்டத்தின் இறுதியில் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பொதுக்கூட்டம் துவங்குமுன், ஊர்முனையில் இருந்து பொதுக்கூட்ட மேடைவரை - ஒரு கி.மீ தூரம் ஊர்வலமாகத் தோழர்கள் நடந்து வந்தனர். இதில் அரசியல்வாதிகள் - போலீசு - ரவுடிகள் மூவரும் எப்படி ஒருவருக்கொருவர் கைகோர்த்துக் கொண்டு மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுகின்றனர் என்பதைச் சித்தரிக்கும் வண்ணம் வேடமிட்டு நடித்து வந்தனர். இதன் பின்னே வந்த தோழர்கள், இக்காட்சியை மக்களிடம் காட்டி, ''இந்நிலையை மாற்றத்தான் போராடுகிறோம்; எனவே பொதுக்கூட்டத்திற்கு வந்து எங்கள் கருத்துக்களைக் கேளுங்கள்'' என வேண்டுகோள் விடுத்தபடியே வந்தனர். பொதுக்கூட்டம் தொடங்குமுன் மேடையில் திடீர்ப்பணக்கார அரசியல் ரவுடிகள் கொட்டம் பற்றிய 15 நிமிட நாடகமொன்றும் நடந்தது. பொதுக்கூட்டத்தையும் கலை நிகழ்ச்சியையும் காண 1000 பேர் வரை திரண்டிருந்தனர். நெய்வேலி நகரின் பல இடங்களில் தெருமுனைக் கூட்டம் வாயிலாகவும் திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளை எதிர்த்த இயக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

● சென்னையில் ஜாபர்கான் பேட்டை பகுதியில் 30.10.95 அன்றும், சேத்துப்பட்டு பகுதியில் 31.10.95 அன்றும் பு.மா.இ.மு சார்பாக இரு பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. இவ்விரு பொதுக்கூட்டங்களிலும் ம.க.இ.க. தோழர். குமார் சிறப்புரையாற்றினார்; விவசாயிகள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த சிறுவர் கலைக் குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடந்தது.

## 11-வது ஆண்டில் ''புதிய ஜனநாயகம்''

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

நமது புதிய ஜனநாயகம் இந்த இதழிலிருந்து 11-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. தமிழகத்தில் பத்தாண்டுகளாக பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு இப்படியொரு பத்திரிகை வெளிவருவதென்பது புரட்சிகர இயக்கத்தில் இதுவே முதன் முறையாகும்.

கடந்த சில ஆண்டுகளாக, கடுமையான நிதி நெருக்கடி காரணமாக நமது இதழ் தொடர்ச்சியாக வெளிவராமல் போயுள்ளது. கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு அடக்குமுறை - அச்சுறுத்தல், பொய் வழக்குகளை துணிவுடன் எதிர்கொண்டு முறியடித்த நாம், நிதி நெருக்கடி எனும் நிழலாய்த் தொடரும் இடர்ப்பாட்டையும் நிச்சயம் முறியடிக்க முடியும். பாசிச இருள் சூழ்ந்து நாடு மறுகாலனியாகி வரும் இன்றைய நிலையில், பரந்து பட்ட உழைக்கும் மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டி வரும் நமது இதழுக்கு நிச்சயம் நீங்கள் தோள் கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம். உங்களது ஊக்கமான ஆதரவுடன், உறுதியான ஒத்துழைப்புடன் எல்லா வகையான இடர்ப்பாடுகளையும் தகர்த்தெறிந்து முன்னேற முடியும் என்ற நம்பிக்கையுடன் 11-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

தோழமையுடன்,
ஆசிரியர் குழு


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 11

இதழ்: 1-2

16 நவம். - 15 டிசம். '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.


## பஞ்சாப்: பத்தாண்டுகளில் 25,000 பேர் ரகசிய கொலை.

பஞ்சாபின் பயங்கரவாதப் போலீசார், பாசிச இட்லரின் ''கெஸ்டபோ'' கொலைப் படைகளையும் விஞ்சிவிட்டார்கள். சீக்கிய தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி கைது செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்களை இரகசியமாக சுட்டுக் கொன்றுவிட்டு, யாரும் உரிமை கோரவில்லை என்று கூறி கணக்கற்ற சடலங்களைப் பஞ்சாப் கொலைகாரப் போலீசார் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். ஒருவரல்ல, இருவரல்ல; ஏறத்தாழ 25,000-க்கும் மேற்பட்டோர் கடந்த பத்தாண்டுகளில் இவ்வாறு இரகசியமாகக் கொல்லப் பட்டு, அவர்களது சடலங்கள் பல கட்டங்களில் போலீசாரால் எரியூட்டப்பட்டுள்ளன. சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்கு கூடத் தெரிவிக்காமலேயே இந்த அட்டூழியம் நடந்துள்ளது.

ஒரு நாளைக்கு சராசரியாக 7 பேர் என்ற விகிதத்தில் கடந்த பத்தாண்டுகளில் 25,000-க்கும் மேற்பட்டோரைக் கொன்று கொள்ளியும் வைத்த பஞ்சாப் போலீசு அட்டூழி யங்களை மனித உரிமை அமைப்புகள் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்த நிலையில், சிரோமணி அகாலி தளப் பிரமுகரும் மனித உரிமைக் கழகச் செயல்வீரருமான ஜஸ்வந்த் சிங்கல்ரா, உச்ச நீதிமன்றத்தில் பஞ்சாப் போலீசாருக்கு எதிராக வழக்கு தொடுத்தார். இதனால் ஆத்திரமடைந்த பஞ்சாப் போலீசார், தரண்தரண் மாவட்டப் போலீசு கண்கா ணிப்பாளரான அஜித் சிங் சந்து தலைமையில் ஒரு கும்பலாகச் சென்று, கடந்த செப்.6-ந் தேதியன்று ஜஸ்வந்த் சிங்கைக் கைது செய்து இரகசியமாகச் சுட்டுக் கொன்றுவிட்டு 'காணாமல்' போய்விட்டதாகக் கதை கட்டினர். இக்கொடுஞ்செயலுக்கு எதிராக, ஜஸ் வந்த் சிங்கின் துணைவியார் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்ட பிறகு, பத்தாண்டுகளாகப் பஞ்சாபில் தொடரும் படுகொலைகள், மனித உரிமை மீறல் அட்டூழியங்களைப் பற்றியும், 'காணாமல்' போன ஜஸ்வந்த்சிங் பற்றியும் மத்தியப் புலனாய்வுத் துறை (CBI) யின் உயர்மட்டக் குழுவைக் கொண்டு விசாரணை நடத்தி மூன்று மாதத்திற்குள் அறிக்கை தருமாறு நீதிபதிகள் உத்திரவிட்டுள்ளனர்.

''பஞ்சாபில் அமைதி திரும்பிவிட்டது; சீக்கிய பயங்கரவாதத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டது; அமைதியை நிலைநாட்டத் தனது உயிரையே தியாகம் செய்தார் முதல்வர் பியாந்த் சிங். பஞ்சாபின் போலீசுத் தலைவரான கே.பி.எஸ்.கில், அமைதியை நிலை நாட்ட அஞ்சாது போரிட்ட தீரர்'' என்று ஆளும் வர்க்கங்களும் பத்திரிகைகளும் பெருமையுடன் பிரச்சாரம் செய்கின்றன. ஆனால், பஞ்சாப் 'அமைதி'யின் மறுபக்கம் அரசு பயங்கரவாதக் கொலைகளும் கொடூரங்களும் நிறைந்தது.

பஞ்சாபில் சீக்கிய பயங்கரவாதம் தலைவிரித்தாடியபோது, தீவிரவாதிகளை ஒடுக் குவது என்ற பெயரில் அடைக்கலமளித்தவர்கள், தார்மீக ஆதரவளித்தவர்கள் என அப்பாவி இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டு, போலீசாரால் இரகசியமாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர். போலீசு வெறியர்களையும், கிரிமினல்களையும் கொண்டு ரிபைரோ காலத்தில் உருவாக்கப்பட்டு, கே.பி.எஸ். கில் தலைமையில் தீனிபோட்டு வளர்க்கப்பட்ட இரகசிய போலீசு கொலைப்படையானது, அப்பாவி சீக்கிய இளைஞர்களைச் சித்திர வதை செய்தும், காணாமல் போனதாக, மோதலில் இறந்ததாகக் கதை கட்டியும் கேள்விமு றையின்றி சுட்டுக் கொன்று பஞ்சாபில் பயபீதியைப் பரப்பியது. இக்கொலைகளுக்குச் சாட்சியாக இருந்தவர்கள்கூட போலீசாரால் தீர்த்துக் கட்டப்பட்டனர். பாகிஸ்தானிலி ருந்து துரத்தப்பட்ட வங்கதேச அகதிகளைக் கூட தீவிரவாதிகள், உளவாளிகள் என்று முத்திரை குத்தி படுகொலை செய்தது, பஞ்சாப் போலீசு. தீவிரவாதிகளைப் பிடிப்பது என்ற பெயரில் பிற வட மாநில அரசுகளின் அனுமதியின்றி நுழைந்து அப்பாவி சீக்கியர் களை நரவேட்டையாடியது. பஞ்சாபில் சீக்கிய இளம்பெண்களைக் கும்பலாகக் கற்பழிப் பது, சொத்துக்களைச் சூறையாடுவது பயிர்களை நாசம் செய்வது, மிரட்டிப் பணம் பறிப்பது என்று வெறியாட்டம் போட்டது. அரசு பணத்தையே எந்தக் கணக்கிலும் இல்லாமல் வரைமுறையின்றித் தின்று கொழுத்து தினவெடுத்துத் திரிந்தது. பாதிக்கப்பட்ட வர்கள் நீதி கோரி வழக்குத் தொடுத்தால் அவர்களையும் வேட்டையாடியது. வழக்கறிஞர் களைக்கூட கடத்திச் சென்று சுட்டுக் கொன்றுவிட்டு 'காணாமல்' போனதாகக் கதை கட்டியது.

பஞ்சாபில் கடந்த பத்தாண்டுகளாகத் தொடரும் இப்பயங்கரவாத வெறியாட்டங் கள் அனைத்தும், ''தேச ஒற்றுமைக்கானது - பிரிவினை சக்திகளுக்கு எதிரானது'' என்ற பெயரில் சர்வ கட்சிகளின் பத்திரிகைகளின் ஒப்புதல் - ஆதரவோடுதான் நடந்துள்ளன. இப்போது இதன் வளர்ச்சியாக ஒவ்வொரு மாநிலத்திலும் பஞ்சாப் பாணியிலான அதிர டிக் கொலைப் படைகள் சிறப்புப் பயிற்சி - சலுகை, சன்மானங்களுடன் கட்டி வளர்க்கப்ப டுகின்றன.

ஆகவே, நாட்டில் மானத்தோடு மக்கள் உயிர் வாழும் உரிமையை நிலைநாட்ட, நாட்டிலேயே மிகப்பெரிய சமூகவிரோத, கிரிமினல் கும்பலாக உள்ள போலீசு அமைப் பைக் கலைக்கக் கோரி போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும். மக்கள் அனைவருக் கும் ஆயுதமேந்தும் உரிமை, மக்கள் குடிப்படை, தேர்ந்தெடுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் கமிட்டிகளுக்கே சட்டமியற்றவும் நிர்வகிக்கவும் அதிகாரம் என்கிற புதிய, புரட்சிகர அரசு அமைப்பு மட்டுமே, இப்படிப்பட்ட போலீசு மிருகங்களின் அக்கிரமங்கள், அட்டூழியங் களை முறியடிக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் கிரிமினல்களின் பகிரங்க சவால்

கடந்த மாத இறுதியில் குமரி அனந்தன் தலைமையில் சென்னை நகரில் பல இடங்களிலும் காங்கிரசார், போலீசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம், மறியல் கல்லெறிச் செயல்களில் ஈடுபட்டனர். இதுதான் விவகாரம்: ஜேப்படித் திருடர்கள் என்று இரண்டு அப்பாவி காங்கிரசுத் தொண்டர்களைப் போலீசார் பிடித்து வைத்திருந்ததாகவும், அவர்களை மீட்கப் போன தலைவர்களை ஏசியதோடு கைது செய்ததாகவும், அவர்களுக்கு சாப்பாடு வாங்க ஜீப்பில் போன தொண்டர்களையும் கைதுசெய்ததாகவும், போலீசு அடக்குமுறை - அராஜகம்தான் இதற்குக் காரணம் என்றும் குமரி அனந்தன் விளக்கம் அளித்துள்ளார். கல்லெறிந்து நாசமாக்கப்பட்ட வாகனங்களும் கடைகளும் இன்னமும் சாட்சியங்களாக இருக்கின்றன. ஆகவே குமரி அனந்தனின் விளக்கம் எப்படி பொய்யானதோ, அதே போல அப்பாவி காங்கிரசாரைக் கைது செய்ததுதான் எல்லாவற்றுக்கும் காரணம் என்பதும் பொய்தான். ஜேப்படித் திருடர்களை மீட்கப் போய்தான் எல்லாம் நடந்தது என்பதே உண்மையாகும். தந்தூரிக் கொலைகாரன் சுசில் சர்மாவையே காங்கிரசுக்காரர்கள் மீட்க முயன்றபோது ஜேப்படித் திருடர்களை விடுவிக்கப் போனது ஆளும் கட்சிக்காரர்கள் அல்ல என்பதாலேயே விவகாரம் இவ்வளவு தூரம் முற்றியது; இல்லையானால் ஜேப்படி கொடுத்தவருக்கு மிரட்டலும், ஜேப்படித் திருடர்களுக்கு அரசு மரியாதை செலுத்தி வழியனுப்புதலும் கிடைத்திருக்கும்.

எவ்வாறாயினும் இந்தச் சம்பவம், இந்தச் சமுதாயத்தில் கிரிமினல்கள் பெற்றுவரும் செல்வாக்கு, தகுதி, துணிவு ஆகியவற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே உள்ளது. இதற்கு முன்பு கள்ளச் சாராய வியாபாரிகளோ, செல்வாக்கு மிக்க ரௌடிகள் - ''தாதாக்களோ'' கைது செய்யப்பட்டால் சாதி பலத்தை வைத்துப் போலீசு நிலையங்களை முற்றுகையிட்டு மீட்டுக் கொண்டு வந்த சம்பவங்கள் விதிவிலக்காக எங்காவது நடந்ததுண்டு. இப்போதைய நிலை என்னவென்றால் கிரிமினல் குற்றங்கள் புரிவது எனது தொழிலுரிமையும், சமூகத் தகுதி, மதிப்புக்குரியதும் ஆகுமென அவர்கள் கொட்டமடிப்பது தான்.

கிரிமினல்கள் நாட்டின் தேர்தல் அரசியல் கட்சிகள் அனைத்தையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து, அவற்றையே தமது கருவிகளாகப் பயன்படுத்தி தமது அதிகாரம் - உரிமையை நிலை நாட்டி வருகின்றனர். ''தவிடு தின்னும் அரசன் ஆளும் நாட்டில் முறம் பிடிப்பது தான் அமைச்சர்கள் வேலை'' என்பார்கள். அதுபோல கிரிமினல் அரசியல்வாதிகள் ஆளும் இந்த நாட்டில் அவர்களுக்கு ''இஸட்''வகை (அதி உயர்ந்த) பாதுகாப்பும் அரசு மரியாதையும் தரப்படுகிறது.

பாசிச ஜெயாவுக்கு மிகவும் பிடித்தமான ''என்னை யாரும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது'' என்கிற வீரவசனம் பேசிக்கொண்டு பகிரங்கமாக நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு கிரிமினல்கள் பவனி வருவது சர்வசாதாரணமாகி விட்டது. எடுத்துக்காட்டாக, தெற்கே ஜெயா - சசி குடும்ப செல்லப்பிள்ளைகளின் எடுபிடிகளின் வழக்கு விவகாரங்களிலும், வடக்கே பிரதமர் நரசிம்மராவ் உட்பட சர்வகட்சிக் குருவான சந்திரசாமி விவகாரங்களிலும் விசாரணை மன்றங்களில் அவர்கள் அடிக்கும் கொட்டம் அராஜகம் எல்லாம் நாட்டின் அதிகாரபூர்வ சட்டபூர்வ அரசியல் அமைப்பையே வெறும் கேலிக்கூத்துதான் என்று காட்டுகின்றன.

தமிழ்நாட்டில் ஜெயா - சசி குடும்பக் கும்பல் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகளால் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் கறுப்புப் பணத்தைக் கொள்ளையடித்தது. உள் நாட்டில் ஏராளமான சொத்துக்களைக் கிரிமினல் முறையில் உருட்டல், மிரட்டல் மோசடிகள் மூலம் வாங்கிக் குவித்தது. மிகையான பெரும் பணத்தை வெளிநாடுகளுக்குக் கடத்திக் (ஹவாலா) கொண்டு போய் முதலீடு செய்தும் பதுக்கி வைத்துள்ளது. ஹவாலா தரகன் கீழக்கரை அமீர், அனைத்திந்திய ஹவாலா புள்ளி ஜெயின் சகோதரர்கள் ஆகியோர் மூலம் இதைச் செய்துள்ளது, ஜெயா-சசி குடும்பக் கும்பல். ''காஷ்மீர் தீவிரவாதிகள்'', சர்வகட்சித் தலைவர்கள், அரசு உயர் அதிகாரிகளுக்கு ஹவாலா பணம் ''பட்டுவாடா'' கடத்தல் செய்யும் ஜெயினின் தொழில் இரகசியங்கள் ஒரு சி.பி.ஐ. சோதனையின் போது சிக்கி மூடிமறைக்கப்பட்டது. ஆனால் விசயம் வெளியே கசிந்து, சில பத்திரிகையாளர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர். இதையே சாதகமாகப் பயன்படுத்தி நரசிம்மராவ் தமது அரசியல் தந்திரங்களுக்காக ஒரு சிலர் மீது ஹவாலா, அந்நிய செலாவணி மோசடி வழக்குக்காக மத்திய அமலாக்கப் பிரிவு, சி.பி.ஐ.யை ஏவி விடுகிறது. நோக்கம் என்னவாக இருந்தாலும் ஜெயா - சசி குடும்பத்தினர் நிரபராதிகளாகிவிட முடியாது.

ஹவாலா மோசடிக்காக விசாரணைக்கு வரும்படி அமலாக்கப் பிரிவு அமீருக்கும் ஜெயா - சசி குடும்ப மூத்த



தினகரனை புகைப்படம் எடுக்கவிடாமல் மறைத்து தடுக்கும் குண்டர்கள்; உள்படம் தினகரன்.


படிப்பகம்

www.padippakam.com

செல்லப் பிள்ளை தினகரனுக்கும் சம்மன் அனுப்பியது. ஆனால் சம்மனுக்கு ஆஜராக மறுத்து மாதக்கணக்கில் அரசு மரியாதை - போலீசு பாதுகாப்புடன் தொடர்ந்து உல்லாசமாகத் திரிந்தனர் அக்குற்றவாளிகள். ஜெயாவின் வளர்ப்பு மகன் "திருமண" கேளிக்கையில் பகிரங்கமாகத் திமிரோடு உலாவினான் தினகரன். ஒரு மணி நேர வேலைக்குப் பல லட்சம் ரூபாய் வாங்கும், நாட்டிலேயே பெரிய பெரிய வக்கீல்களை வைத்து வழக்குகள் போட்டு நடவடிக்கை ஏதும் எடுக்கவிடாமல் செய்தனர். அமலாக்கப் பிரிவினால் பல சம்மன்கள் அனுப்பத்தான் முடிந்ததே தவிர, அவர்களைப் பிடிக்கத் துணியவில்லை. முடிந்த அளவு இழுத்தடித்துவிட்டு, போதிய பாதுகாப்பு தேடிக் கொண்டு சரணடைந்த அந்த ஹவாலா மோசடிக் கிரிமினல்கள் சிறையிலும் "ராஜ உபச்சாரத்"துடன், தொடர்ந்து தமது தொழிலையும் அதே வேகத்தில் நடத்தி வருகின்றனர்.

ஜெயா - சசி குடும்பத்துக்குச் சொந்தமான ஜெ.ஜெ. டி.விக்காக அந்நிய விண்கல நிறுவனத்துடன் ஒப்பந்தம் போட்ட விவகாரத்தில் அந்நியச் செலாவணி மோசடி செய்த குற்றத்தின் கீழ் அமலாக்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் இன்னொரு செல்லப்பிள்ளை பாஸ்கரன். சிலமணி நேரம்கூட சிறையில் இருக்க மறுத்து அடம்பிடித்து, நெஞ்சு வலி என்று பச்சைப் பொய் சொல்லி ஐந்து நட்சத்திர வசதிகளுடன் தொடர்ந்து தனது தொழிலைக் கவனித்துவந்தார்.

ஜெயா அரசின் இடஒதுக்கீடு கொள்கைக்கு எதிராக வழக்குத் தொடுத்திருந்த வக்கீல் விஜயன் மீது ஜெயா குடும்ப அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் கட்டளைப்படி கொலைவெறித் தாக்குதல் நடத்திய அ.தி.மு.க. தென் சென்னை மாவட்டச் செயலாளர் ஆதி ராஜாராம், சி.பி.ஐ.யிடம் கைதாகாமல் தப்பிக்கவும், பிணை மறுக்கப்பட்ட பின் சரணடைந்தும் சிறையில் அடைபடாமல் இருக்க, அரசு மருத்துவமனையில் தங்கி உல்லாச ஓய்வு எடுக்கிறார். ஹிரணியா நோய், இதய நோய் என்று அப்பட்டமான மோசடி நாடகமாடுகிறார். இதேபோல ஜெயா - சசி, எஸ்.டி.எஸ். குடும்பத்தால் ஏவிவிடப்பட்டு தி.மு.க. வக்கீல் சண்முக சுந்தரம் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்திய வடசென்னை "தாதா", வெல்டிங் குமார், சி.பி.ஐ. தேடும் நபராக அறிவிக்கப்பட்டும் அரசு - போலீசு பாதுகாப்புடன் இன்னமும் வடசென்னையில் தனது மஃபியா - ரௌடி ஆட்சி நடத்தி வருகிறார்.

இப்படிப்பட்ட கிரிமினல்களில் தலைமைச் சக்தியாக விளங்கும் ஜெயா-சசி குடும்பமே பல குற்றச்சாட்டுகள் வழக்குகளில் சிக்கியுள்ளது. ஹவாலா மோசடி அவற்றுள் ஒரு விவகாரம்தான். "டான்சி" நிறுவன நிலம் வாங்கியது, நிலக்கரி இறக்குமதி, ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா மீது திராவகம் வீசி சிதைத்தது, "தராசு" ஊழியர்கள் கொலை, அரசு அதிகாரிகள் வீடு புகுந்து தாக்கி இலஞ்சத்தில் தமது பங்கை மீட்டது, பிறர் சொத்துக்களை மிரட்டிக் கைப்பற்றிக் கொள்வது இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். தமிழ்நாடே தான் பட்டாப் போட்டுக் கொண்ட மாநிலமாகக் கருதிக் கொள்ளையடிக்கிறது. எங்கும் எதிலும் ஆபாசம், கிரிமினல் ரௌடித்தனத்தையே தனது ஆயுதமாக ஏந்தி வருகிறது. ஜெ.ஜெ. டிவி ஒளிபரப்புவதற்குக் கம்பி வழித் தொடர்பாளர்களை மிரட்டிப்



ஆதிராஜாராமை நீதிமன்றத்திற்கு அழைத்து வரும் போலீசு; கிரிமினல்களின் ஆட்சி.

கிரிமினல்களின் தலைமைச் சக்தியாக விளங்கும் ஜெயா-சசிகலா குடும்பமே பல குற்றச்சாட்டுகள் வழக்குகளில் சிக்கியுள்ளது. ஹவாலா மோசடி அவற்றில் ஒரு விவகாரம்தான். கிரிமினல் குற்றங்களை புரிவது எமது தொழிலுரிமையும் சமூகத் தகுதியும் ஆகுமென கொட்டமடிக்கிறது.

பணம் பறித்தது. தெருவில் போவோரை
யெல்லாம் மிரட்டி, அந்த டி.விக்கு
பேட்டி எடுப்பது, சினிமாக்காரர்களை
மிரட்டியோ ஏய்த்தோ ஒளிபரப்புவது
ஆகியவை ஜெயா - சசி குடும்பத்தி
பாணியிலான அராஜகத்துக்கு ஒ
சான்று.

எந்தப் பிரச்சினையையும் கிரி
னல் ரௌடி முறையிலேயே எதிர்கொ
வது என்பதனை ஜெயா - சசி கும்ப
கொள்கையாகக் கொண்டுள்ளது. சட்
மன்றத்திலேயே எதிர்க்கட்சியினர் மீ
கொலைவெறித் தாக்குதல், மத்தி
அமைச்சர்களையே தாக்குவது; ஒளி
ரப்பு நிலையம், ரயில் - விமான நிலை
யங்களை சூறையாடித் தனது பலத்தை
காட்டுவது; அடிபணியாத தனது கட்
எம்.எல்.ஏக்களையே வெட்டுவது; அர
அதிகாரிகள் மீது பழிவாங்கும் தாக்குத
போலீசுக்காரர்களையே தேவைய
னால், அடித்து நொறுக்குவது; உயர் நீ
மன்ற நீதிபதி, ஆளுநர் மீது தரக்கு
வான வசவுப் பிரச்சாரங்கள் நடத்துவ
எதிர்க்கட்சிக் கூட்டங்களில் மட்டுமல்
உயர் நீதிமன்றத்திலேயே ஆபாச நி
வாண வெறியாட்டங்கள் போடுவது; நீ
மன்றங்கள் உட்பட விசாரணையிடங்
ளுக்கு வரும் இந்தக் கிரிமினல்களை நூ
றுக்கணக்கான வாகனங்கள் கட்சி
கொடிகள், கரைவேட்டிகளுடன் ஊர்வ
மாக அழைத்து வருவதும், அவர்களை
தியாகிகள், தலைவர்கள் எனச் சொல்
வாழ்த்தி முழக்கமிடுவதும், வானொ
வானொளி, பத்திரிக்கை நிருபர்களை
தாக்குவதும், நீதிமன்றங்கள் அமலாக்க
பிரிவு அலுவலகங்கள் போன்றவற்



படிப்பகம்

www.padippakam.com

முற்றுகையிட்டு அதிகாரிகளை மிரட்டுவதும் - இப்படிப் பலவாறு அப்பட்டமாகவே கிரிமினல்கள் அடாவடித்தனங்களில் ஈடுபடுகின்றனர்.

அரசு அதிகாரிகள், போலீசுக்காரர்கள், மருத்துவர்கள், நீதிபதிகள் ஆகிய அனைத்துத் தரப்பினருமே இந்த அரசியல் கிரிமினல்களின் சேவகர்கள் ஆகியுள்ளனர். இவர்களது பல்வேறு அதிகார முறைகேடுகளுக்கும் அதிகாரிகள் உடந்தையாக இருக்கின்றனர். போலீசுக்காரர்களோ, இவர்களுடைய குற்றங்களைக் கண்டு கொள்வதில்லை; அல்லது கையும் களவுமாக சிக்கினால் (திராவக வீச்சில் சுர்லா போன்றவை) தவறான விசாரணை அறிக்கைகள் போடுவது, போலியான குற்றவாளிகளைப் பிடிப்பது, வழக்குகளைக் கிடப்பில் போடுவது என்று சகலவகையிலும் துணைபோகின்றனர். மருத்துவர்களோ பொய்யான மருத்துவ அறிக்கைகள் தருவது, நீதிமன்றங்களில் பொய்ச்சாட்சி தருவது, கிரிமினல்களுக்கு ஐந்து நட்சத்திர வசதிகளுடன் ஓய்வு ஏற்பாடு செய்வது என்று ஊழியம் புரிகின்றனர். நீதிபதிகளோ, தவிர்க்க இயலாத சமயங்களில் சில பிணை மறுப்புத் தீர்ப்புகள், கண்டனங்கள் தெரிவித்தாலும், அடிப்படையில் ஜெயா - சசி குடும்ப கிரிமினல்களுக்குச் சாதகமாக அவர்கள் மீதான விசாரணைகளுக்குத் தடைபோடுவது, தாமதிப்பது, தள்ளிப் போடுவது, இரண்டுங் கெட்டான் அவித்தனமான தீர்ப்புகள் வழங்குவது என ஊழியஞ் செய்கின்றனர். இதற்கு ஒரு சான்றாகவே உள்ளது ஜெயா - சசி குடும்ப கலியாணத்துக்கான அதிகார முறைகேடுகள் மீதான வழக்கில் உடனே தீர்ப்பளிக்காது கலியாணம் முடியும் வரை தள்ளிப்போட்டதும், இம்முறை கேடுகளுக்கு ஜெயா பொறுப்பல்லவென்று தீர்ப்பளித்ததும்; இன்னொரு சான்று ஜெயா மீது ஊழல் வழக்குத் தொடுக்க சு.சாமிக்கு ஆளுநர் அளித்த அனுமதியை எதிர்த்து ஜெயா உச்ச நீதி மன்றத்தில்தொடுத்த வழக்கு இழுத்தடிக்கப்படுகிறது. இதைச் சுட்டிக்காட்டி சு.சாமி வாதிட்ட போது ஜனவரி 5-ந்தேதி விசாரிப்பதாக அறிவித்திருந்த நீதிபதி ஜனவரி 4-ந்தேதியே விசாரிப்பதாகக் கூறி கேலிக் கூத்தாடினார்.

கிரிமினல் மஃபியா - அரசியல்வாதிகளின் அராஜகம், அக்கிரமங்களை எதிர்க்கும் பலமோ, துணிவோ இல்லாமல் இச்சமுதாயம் முழுவதுமே கையறுநிலையில் கண்டு நிற்கிறது. கண்டன அறிக்கைகளோ, சட்டபூர்வ வழக்குகளோ இந்தக் கிரிமினல்களை எதுவும் செய்ய முடியாது என்பது நிரூபணமாகிவிட்டது. அவர்களை எதிர்த்துத் தாக்கும் துணிவும், தயார் நிலையும் கொண்ட தற்காப்பு ஆயுத பாணியான புரட்சிகர இயக்கமே இன்றைய தேவையாக உள்ளது.

• ஆர்.கே.

# ரஜினி அலை: கிசுகிசு பத்திரிகைகள் பரப்பும் மூளைக்காய்ச்சல்

ரஜினி அலை தமிழகத்தின் அரசியலில் வீசுகிறது; ரஜினி அரசியலுக்கு வந்தால் கண்டிப்பாக அவர்தான் அடுத்த முதல்வர்; எம்.ஜி.ஆருக்கு இருந்த புகழ், செல்வாக்கு இன்று ரஜினிக்கு இருக்கிறது இத்தகைய கருத்துகள் கணிசமான தமிழ்மக்களின் சிந்தனையை ஆக்கிரமித்துள்ளது. இதற்கு முக்கிய பங்காற்றியுள்ளவை - திரைப்படம் மற்றும் பத்திரிகை துறை. ரஜினி ஒரு ஆம்பளை ஜெயா என்பது வெளிப்படை. ஆனால் ஜெயாவின் உதிர்ந்த முடிகளும் காங்கிரசு கும்பலும் ஜெயாவிற்கு எதிராக ரஜினியின் கவர்ச்சியை முன்னிறுத்தி ஆதாயம் தேட முனைகின்றன. இவர்களுக்கு சாமரம் வீசி, சொறிந்து விடுகிறது, பத்திரிகை மற்றும் திரைப்படத் துறையிலுள்ள ஒரு கும்பல். ஜெயாவை எதிர்க்கிற பார்ப்பன கும்பலும் இந்த அணியில் அடக்கம். இவர்கள் எல்லோரும் கைகோர்த்துக் கொண்டு ரஜினி பற்றி தோற்றுவிக்கிற மாயை தமிழகத்தில் மக்களின் மூளையை பாதிக்கக் கூடிய ஒருவகை நோயே. இந்நோய் பரப்பும் இக்கிருமிகளில் கிசுகிசு பத்திரிகைகளின் பாத்திரம் முதல் நிலையில் உள்ளது.

நடந்து முடிந்த, நடக்க இருக்கின்ற அதிகாரப்பூர்வமான செய்திகள் - சம்பவங்களை நாளிதழ் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்றிருந்த நம்பிக்கை பொய்த்துப் போய் வெகுகாலமாகிவிட்டது. ஆச்சரியக்குறி, அடைப்புக்குறி, கேள்விக்குறி, மேற்கோள் குறிகளுக்குள் கிசுகிசு - வதந்திகளையே செய்திகளாகப் போட்டு பரபரப்பூட்டுவது நாளிதழ்களின் வாடிக்கையாகிவிட்டது.

ரஜினிக்கு சாமரம் வீசும் ஏ.எஸ். மணி.



நாளிதழ்களே இப்படி என்றால் 'புலனாய்வு - விமர்சனம்' என்ற பெயரில் வெளிவருகிற அரசியல் வாரப் பத்திரிகை வகையறாக்களைப் பற்றி சொல்லவே தேவையில்லை. முன் அட்டை முதல் பின் அட்டை வரை ஒரே கிசுகிசு மயம்.

ஜூனியர் விகடனில் கழுகார் எழுதுவதும், நக்கீரனின் சங்கர்லால் எழுதுவதும்தான் கிசுகிசு என்றும் மற்றவை அவர்கள் வெளிக்கொண்டு வருகிற உண்மை செய்திகள் - சம்பவங்கள் - அரசியல் கருத்துகள் என்றும் பல வாசகர்கள் பாமரத்தனமாக கருத்து வைத்திருக்கிறார்கள். தங்கள் ஊரில், தெருவில், நகரில் நடக்கிற சில சம்பவங்களின் செய்திகளை இப்பத்திரிகைகளில் படித்ததும் மற்றவையும் அப்படியே உண்மைகளாகவே இருக்கும் என நம்பி விடுகிறார்கள் (பகுதிவாரியான இந்த செய்தி கட்டுரைகளிலும் ஒரு சார்பாகவோ, விசயத்தை திரித்தோ, உருப்படியற்ற தீர்வுகளுடனோ எழுதுவதையும் பார்க்கலாம்). சிறிய மீனை போட்டு பெரிய மீனை பிடிப்பது இது தான். பெரிய திருட்டை மறைக்க சிறிய திருட்டை ஒத்துக் கொள்வதும் — கிசுகிசுவிற்கென பக்கங்கள் ஒதுக்குவது — இது தான்.

தெரியாத விசயங்களைத் தெரிந்து கொள்கிற ஆர்வம் மனிதனிடமுள்ள இயற்கை. புதிய விசயங்களை சரிதானா என்று நேரடியாக ஆதாரப்பூர்வமாக சோதித்துப் பார்க்க முடியாதது வாசகர்களின் இயலாமை. இவற்றை சாதகமாக்கிக் கொண்டு வாசகர்களுக்குத் தெரியாத - அப்பாற்பட்ட அரசியல்வாதிகள் மற்றும் பிற தனி நபர்கள் விசயங்களில் - சம்பவங்களில்தான் புளுகுகளை அவிழ்த்து விடுகின்றன, கிசுகிசு பத்திரிகைகள். மேலும் வாசகர்களின் மறதி, வாசகர்களில் பாதியளவிற்கு தொடர்ந்து ஒரே பத்திரிகை படிக்காத நிலைமை போன்றவைகளையும் சாதகமாக்கிக் கொண்டு முன்னுக்குப் பின் முரணாகவும் இல்லாததை இருப்பதுபோலவும் நடக்கவே முடியாததை நடப்பது போலவும் இஷ்டத்திற்கு எழுதுகின்றன.

ஜூனியர் விகடனும், நக்கீரனும் கிசுகிசுவிற்கென தனிபக்கங்கள் ஒதுக்கி



படிப்பகம்

www.padippakam.com

''நேர்மை'' வேடம் போடுகிறது என்றால் அப்படி எதுவும் தனிப் பக்கங்கள் ஒதுக்காமல் கிசுகிசுவே இல்லை என வேடம் போடுவது துக்ளக், தராசு, நெற்றிக்கண் பத்திரிகைகளின் பாணி. இதில் துக்ளக்கோ, கிசுகிசுக்களைப் பரப்புவதாக பிற பத்திரிகைகளை கண்டித்துக் கொண்டே கிசுகிசு பரப்புவதில் திறமைசாலி.

கிசுகிசு - வதந்தி - வெற்று யூகம் தான் இப்பத்திரிகைகளின் உயிர்மூச்சு! செய்தி எது, கிசுகிசு எது எனப் பிரித்துணர முடியாத வண்ணம் கலந்து, திரித்து எழுதுவதுதான் இப்பத்திரிகையாளர்களுக்கு இருக்கும் ஒரே திறமை! போதை மருந்து உட்கொண்டவனுக்கு கிடைக்கிற கணநேர இன்பம், வறுகடலையை கொறிக்கிறவனுக்கு கிடைக்கிற கணநேர சுவைபோன்று தம் பத்திரிகையை படிக்கிற நேரம்வரை வாசகனின் ஆர்வத்தை தூண்டி ரசிக்க வைத்தால் போதும் என்பதுதான் கிசுகிசு பத்திரிகை எழுத்தாளர்களுக்கு இருக்கும் ஒரே அளவுகோல்!

அரசு துறைகளின் மக்கள் தொடர்பு அதிகாரிகள், போலீசு நிலையங்கள், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகளில் உள்ள செய்தி அதிகாரிகள் போன்றவர்கள்தான் நாளிதழ்களுக்கான செய்தி மூலவர்கள். கிசுகிசு வாரப் பத்திரிகைகளுக்கோ கூடுதலாக சில தனிப்பட்ட நண்பர்கள் அந்தந்த துறையிலிருந்து செய்திகளைத் தருபவர்களாக இருக்கிறார்கள். போலீசு மற்றும் உளவுத்துறையிலுள்ள அதிகாரிகள், அரசியல்வாதிகளில் ஆளுங்கட்சியினர் உட்பட மேல்மட்ட அளவில் பலர் தமது கோஷ்டி மோதலுக்கு வசதியாக கிசுகிசு வாரப் பத்திரிகைகளுக்கு செய்தி கொடையாளர்களாக உள்ளனர். இவர்கள் தருகிற அரைகுறை செய்திகளை அல்லது வதந்திகளை மூலமாக வைத்து அல்லது அதுகூட இல்லாமல் தமது கற்பனையில் மேலும் மேலும் கண், காது, மூக்கு வைத்து அலங்கரிப்பதுதான் கிசுகிசு பத்திரிகைகளில் வருகிற அரசியல் கட்டுரைகள். இப்படி எழுதுவதற்கென்றே ஒவ்வொரு பத்திரிகையிலும் சில மூளைவீங்கிகள் இருக்கிறார்கள். துக்ளக்கிற்கு தோஸ்த், ஜூனியர் விகடனுக்கு மதன், சோலை (கழுகார்), பிரகாஷ் எம். சாமி, நக்கீரனுக்கு ஆர். கோபால், காமராஜ், தராசுக்கு ஷ்யாம், கரிகாலன், நெற்றிக்கண்ணுக்கு எம்.பி. திருஞானம், துரை, ஏ.எஸ். மணி போன்றவர்களை உதாரணமாகப் பார்க்கலாம். இவர்களுக்கு உண்மையான மூளைக்குப் பதிலாக கற்பனை - கனவுகளால் வீக்கமடைந்த கிசுகிசு மூளைதான் எழுத்துக்களை பிரசவிக்கும் போலிருக்கிறது!



ரஜினியுடன் நக்கீரன் ஆர். கோபால் - காரியவாத ரசிகன்.

ஜெயலலிதாவை எதிர்ப்பதற்கு ஆர்.எம். வீரப்பன், திருநாவுக்கரசு, பண்ருட்டி ராமச்சந்திரன், ராஜாராம், செ.மாதவன் போன்ற உதிர்ந்த முடிகளுக்கு எப்படி எவ்வித அருகதையும் இல்லையோ, அதுபோல் இக் கிசுகிசு பத்திரிகைகளுக்கும் இல்லை. இன்றைக்கு ரஜினிக்கு சாதகமாக நின்று எழுதுவது போல் ஜெயாவுக்கு சாதகமாக கிசுகிசுக்கள் எழுதியவைதான் இந்த வார ஏடுகள் அனைத்தும். எம்.ஜி.ஆருக்குப் பின்னர் ஆர்.எம். வீரப்பன், ஜெயலலிதா கோஷ்டி சண்டைகளில் இரு கும்பலையும் எதிர்த்து எழுதி வந்த இக் கிசுகிசு பத்திரிகைகள், ஜெயா தலைமையில் ஒன்றாகி காங்கிரசு கூட்டுடன் கருணாநிதியை எதிர்த்து நின்ற போது ஆதரித்து எழுதின.

நாடாளுமன்றத் தேர்தல் ஜெயலலிதா சவால், தி.மு.க. சமாளிக்குமா? (ஜூ.வி. 25.10.89), ஜெயலலிதா பராக் பராக் (ஜூ.வி. 8.8.90), ஆட்சியைக் காப்பாற்ற கருணாநிதியின் தகிடுதத்தங்கள்! மீண்டும் எம்.ஜி.ஆர். ஆட்சி! டெல்லி விரைகிறார் ஜெயலலிதா (நக்கீரன் - 29.12.90), நடராஜன் - ஜெயலலிதாவின் ஜெட்பிளான் (தராசு 27.3.90), ஜெயலலிதாவின் ஷாக் ஃபார்முலா (தராசு 2.4.91) — இப்படி ஆதரித்து எழுதியவர்கள் - ஜெயலலிதா பெண்களுக்கு அதிக சீட்டு கொடுத்து புரட்சி செய்ததாக எல்லாம் புகழ்ந்தவர்கள், ஜெயா ஆட்சிக்கு வந்து சில மாதங்களில் அம்பலப்பட்டு நின்றதும் எதிர்க்கத் தொடங்கினர். அதற்குப் பிறகு அட்டைக்கு அட்டை ஜெயலலிதாவை தாக்கி அசிங்கமாகவெல்லாம் படம் போட்டார்கள். ஜெயா ஆட்சி கலைகிறது என்ற பொருளில் இப்பத்திரிகைகள் வெளியிட்ட தலைப்புகளை எண்ண முடியாது!?

ஆர்.எம். வீரப்பன் தொடங்கி உதிர்ந்த முடிகளின் செயல்களைத் தாக்கி - விமர்சித்து எழுதிய இதே பத்திரிகை[கள்], இன்று தூக்கி தலையில் வைத்து[க்] கொண்டாடுகின்றன. வீரப்பன் வீரம் இழந்த கதை (ஜூ.வி. 19.7.89), அம்ப[ல]த்திற்கு வரும் ஆர்.எம்.வி. விவகாரம், அழிவு சக்திக்கு ஆரத்தி எடுக்கிறார் ஜெயலலிதா, அ.தி.மு.க.வில் பண்ருட்டி (நக்கீரன் - 20.9.89), ஆர்.எம்.வி. மீது ஊழல் குற்றச்சாட்டுகள், பி.எச். பாண்டியன் தயாரிக்கும் பட்டியல் (தராசு 4.9.89), ஆர்.எம்.வீ.யின் புதிய அடிதடி (தராசு, 5.6.90) — இப்படி தலைப்பிட்டு எழுதிவிட்டு, பின்னர் ஜெயாவை எதிர்க்கும் போது இவர்களின் புலம்பல்களுக்கு விருந்தினர் பக்கங்களை ஒதுக்கி கொடுத்தன, பல பத்திரிகைகள். எழுத்து வா[ச]னையே அறியாத கழிசடைகள் எல்லாம் எழுத்தாளர் ஆக்கப்பட்டனர்!

துக்ளக் - சோ, ஜெயாவின் கொடுங்கோலாட்சியை இரண்டு வருடத்திற்கு மேலாக ஆதரித்து நின்றார். ''புலிகளை ஒடுக்குகிறார், `கருணாநிதி ஊழலைக் காட்டிலும் ஜெயாவின் ஊழல் அதிகமில்லை'' என்று கூறி ஆதரித்தார். பிறகு ''புலிகளுக்கு ஜெயா உதவுகிறார், ஊழலில் கருணாநிதிக்கு இரண்டாவது இடம்தான், ஜெயாவுக்கே முதலிடம்'' என்று கூறி எதிர்த்து நிற்கிறார். இன்று ஜெயாவுக்கு எதிராக ரஜினிக்கு வக்காலத்து வாங்குவதோடு ரஜினியின் முக்கிய ஆலோசகர்களில் ஒருவராகவும் இருந்து கோயபல்சு பாணி பிரச்சாரம் செய்கிறார்.

பச்சோந்திகளைப் போல், அரசியல் பிழைப்புவாதிகள் - கட்சிமாறிகளைப் போல் நிறமும் குணமும் நிலையும் மாற்றிக் கொள்கிற கிசுகிசு வாரப் பத்திரிகைகள் வாசகர்களின் மறதி மீது வைத்திருக்கும் அபார நம்பிக்கைதான் அளவிடற்கரியது. ஏதோ இப்படி சில வருடங்கள் கழித்து அல்லது சில மாதங்கள் கழித்து தமது நிலைப்பாட்டை மாற்றி எழுதுகிறார்கள் என்றில்லை; ஒரு சில வாரங்களுக்குள்ளாகவே, ஒரு சில பக்கங்களுக்குள்ளாகவே முன்னுக்குப் பின் முரணாக எழுதுகிறார்கள்.

ஜெயலலிதா விசயத்தில் தனிநபர் துதி, கட்-அவுட் மற்றும் காலில் விழும் அடிமை கலாச்சாரம், ஆடம்பர கூத்துக்களை கண்டித்து எழுதுகிற இப்பத்திரிகைகள், ரஜினி விசயத்திலோ அக்கம்பக்கம் பார்க்கப் புகழ்ந்து எழுதுகின்றன. ரஜினியை ரசிகர்கள் தெய்வமாக மதிப்பதையும், காலில் விழுந்து வணங்குவதையும், அரசியலுக்கு வரவேண்டும் எனக் கூறி உண்ணாவிரதம் இருப்பதையும், கத்தியால் குத்தி ரத்தம் சிந்தி மயக்கமடை[ந்]



படிப்பகம்

www.padippakam.com



**ரஜினியின் முக்கிய ஆலோசகராக இருந்து கோயபல்சு பாணி பிரச்சாரம் செய்யும் ''சோ''- கிசுகிசு எழுதி ஆதாயம் அடைகிறார்.**

தையும் வர்ணித்து எழுதுகிறார்கள். ரஜினியின் கட்-அவுட், ஜெயலலிதா கட் - அவுட்டை விட உயரமாக இருந்ததாக புளகாங்கிதம் அடைகிறது, ஒரு பத்திரிகை.

ரஜினி சுயமாக முடிவெடுப்பவர்; யாருக்கும் பணியவோ, பயப்படவோ மாட்டார்; ஜெயலலிதாவைப் போல்பிறர் சொல் கேட்கும் கிளிப்பிள்ளை அல்ல என்றெல்லாம் எழுதுகிற அதேசமயம், ரஜினி, தான் வெளியிடும் அறிக்கையை எல்லாம் ஆர்.எம்.வீ.யிடம் காட்டி திருத்தம் பெற்று வெளியிட்டதாகவும் எழுதாத பத்திரிகை இல்லை. ரஜினி தனது குருநாதர் சிதானந்தா கட்டளைபடிதான் செயல்படுகிறார் என்றும் எழுதுகிறது ஒரு பத்திரிகை.

ஆர்.எம்.வீ-க்கு பாட்ஷா படத்தின் மூலம் ''லக்கி பிரைஸ்'' விழுந்திருப்பதாகவும் அரசியலில் ஓரங்கட்டப்பட்டு ஓய்வு பெற இருந்தவருக்கு ரஜினி மூலம் யோகம் அடித்திருப்பதாகவும் எல்லா பத்திரிகைகளும் எழுதின. சில வாரங்களில் ஆர்.எம்.வீ. திட்டமிட்டு ரஜினியை அரசியலுக்கு இழுத்து விட்டுக் கொண்டிருப்பதாக மாற்றி எழுதின. பாட்சா படம் மட்டுமல்ல, ரஜினியை வைத்து என்று முதல்படம் எடுத்தாரோ அன்றே ஆர்.எம்.வீ. திட்டமிட்டதாகவும் ஜூனியர் விகடன் எழுதியது. எதிர்க்கட்சியினர் எல்லோரும், சசிகலா கும்பல் தம்மீது மத்திய அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் எடுத்து வரும் நடவடிக்கையிலிருந்து கவனத்தை திசை திருப்புவதற்காக ரஜினி விவகாரத்தை திட்டமிட்டு பெரிதுபடுத்தியதாக கூறினர். இதற்கிசைவாகவும் தலையாட்டியது, நக்கீரன்.

அ.தி.மு.க. -வை உடைத்து ரஜினி - ஆர்.எம்.வீ. தலைமையில் கட்சியும் ஆட்சியும் உருவாகிறதாகவும், போட்டிப் பொதுக்குழுவை ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடத்த திட்டமிட்டு விட்டதாகவும் எழுதிய (29.8.95) தராசு, பின்னர் பத்தாவது மாதத்தில் ஜெயா ஆட்சியை டில்லி அரசு கலைத்து ரஜினி - ஆர்.எம்.வீ. தலைமையில் ஆட்சி அமையும் என்று மாற்றி எழுதியது.

ஒரு இதழில் ரஜினி முதல்வர் (2.10.95) என்றும் மறு இதழில் ரஜினி வெளியிலிருந்து ஆதரிக்க ஆர்.எம்.வீ. முதல்வர் என்றும் மறு இதழில் ரஜினி ஆர்.எம்.வீ., திருநாவுக்கரசு, மூப்பனாருக்கிடையே முதல்வர் யார் என குடுமிப்பிடி சண்டை நடப்பதாகவும் (13.11.95) நெற்றிக்கண் மாற்றி மாற்றி எழுதியுள்ளது. புதிய வரவாக இருக்கும் நெற்றிக்கண் பத்திரிகை, சந்தையை பிடிக்க வேண்டும் என்பதால் கிசுகிசுப்பதில் கீழ்த்தரமாகி ஒருபடி மேலே போய் நிற்கிறது.

ரஜினியை ஆர்.எம்.வீ., திருநாவுக்கரசு, சோ, மூப்பனார், குமரி அனந்தன், நரசிம்மராவ் போன்றவர்கள் சந்தித்தால் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதை நாளிதழ்களே கிசுகிசு எழுதத் தொடங்கி விட்டதால், கிசுகிசு பத்திரிகையாளர்களோ அடுத்தக் கட்டத்திற்குப் போய் விட்டார்கள்.

அமிதாப்பும் ரஜினியும் கைகோர்த்துக் கொண்டு அரசியலில் குதிக்கப் போகிறார்கள் என்று 30.8.95 ஜூ.வி.யில் பிரகாஷ் எம். ஸ்வாமி எழுதினார். போட்டி போட்டுக் கொண்டு, சோனியாவும் ரஜினியும் சந்தித்து முடிவெடுக்கப் போவதாக எழுதியது நெற்றிக்கண் (20.11.95). ரஜினி - ராம்ஜெத்மலானி சந்திப்பு - ரகசிய கூட்ட பேச்சு அம்பலம் (1.11.95) என்றது நக்கீரன். ''திருநாவுக்கரசிடம் ரஜினி சொன்ன ரகசியம்'' என 25.10.95 நக்கீரனில் கதையளக்கிறார் காமராஜ். ரஜினி முன்னிலையில் சரணடையத் தயார் - சந்தனக் கடத்தல் வீரப்பன் சபதம் என்று புளுகுகிற நெற்றிக்கண் (23.10.95), நக்கீரன் பாணி 'பந்தா'வில் இதை அனுமதியில்லாமல் யாரும் பிரசுரிக்கக் கூடாது என்கிறது. ரஜினியும் வை.கோ.வும் ரகசியமாக சந்தித்து கைகோர்த்து தமிழக அரசியலைக் கலக்கப் போவதாக தம்பங்கிற்கு தராசு (12.9.95) எழுதியது.

**ரஜினி ரசிகர்களே வியக்குமளவிற்கு ரசிகர்களாகிப் போனார்கள், கிசுகிசு பத்திரிகையாளர்கள். ரஜினியின் நடை, உடை, பாவனைகளை சீட்டியடித்து ரசித்து எழுதுகிறார்கள்.**

இப்படி போட்டி போட்டுக் கொண்டு கிசுகிசுப்பதில் இவர்களுக்குள் சில மோதல்களும் நடக்கின்றன. ரஜினியை சந்தித்த சோ, அரசியலில் நுழைய வேண்டாம் என்று கூறியதாக எழுதியது ஜூனியர் விகடன். இதைக் கண்டித்து மறுப்பும் விளக்கமும் தந்தது, துக்ளக். ரஜினியின் தேர்தல் பிரச்சாரத்திற்கு ''சூப்பர் வேன் ரெடி'' என ஜூ.வி. ஒரு செய்தி (1.11.95) வெளியிட்டது. அந்த ''வேனின்'' சொந்தக்காரரைப் பிடித்து இது தனது சொந்த தேவைக்கானதுதான்; ரஜினிக்கு அல்ல என்று பேட்டியெடுத்து பதிலடி கொடுத்தது நக்கீரன்.

அரசியல் தலைவர்களின் ரகசிய சந்திப்புகளை உடன் இருந்து கேட்டதாக எழுதுகிற கிசுகிசு பத்திரிகைகள் அவர்களின் முகபாவனைகள், உள்ளக்கிடக்கைகள் வரை படம் பிடித்துக் காட்டுகின்றன. ரஜினி யார் யாரையெல்லாம் சந்திப்பார், என்ன பேசுவார்கள் என்பதை முன் கூட்டியே கதையளந்து, அவர்களின் கோபம், சிரிப்பு போன்ற உணர்ச்சி பாவனைகளைக்கூட குறிப்பிடுகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். மாத நாவல் கதையாசிரியர்களும், திரைப்படக் கதையாசிரியர்களும் இவர்களிடம் மண்டியிட வேண்டும். கடற்கரையோரம் ''காட்டேஜ்'' களிலும் ஐந்து நட்சத்திர விடுதி உல்லாச மெத்தைகளிலும் படுத்துக் கொண்டு அவர்கள் கனவு காணுகிறார்கள்; இவர்களோ பத்திரிகை அலுவலக நாற்காலியில் சிகரெட் புகைமூட்டத்திற்கு நடுவே கனவு காணுகிறார்கள் என்பது தான் வேறுபாடு.

மூளை வீங்குமளவிற்கு கனவு கண்டால் கூட விசயத்தால் வாசகனைக் கவர முடிவதில்லை; வார்த்தை ஜாலங்களால் தான் கவர முனைகிறார்கள். அதிர்ச்சி, ஆச்சரியம், அதிசயம், அற்புதம், திடீர் திருப்பம், புதிய தகவல்கள், ஆதார ரிப்போர்ட், சஸ்பென்ஸ், விறுவிறுப்பு தகவல், 'டொட்டடைய்ங்' ரிப்போர்ட், அசத்தல் ரிப்போர்ட், சூப்பர் ரிப்போர்ட் போன்ற ஏராளமான வார்த்தைகள் மூலம் வாசகனின் ரசனையை சூடேற்ற அரும்பாடுபடுகிறார்கள். கட்டுரையில் தாம் செய்யும் தில்லுமுல்லுகளை இப்படி செயற்கையாக பிரமிப்பூட்டிதான் மறைத்துக் கொள்கிறார்கள்.

ரஜினியின் ''முத்து'' திரைப்படத்தை, ரசிகர் சிறப்புக் காட்சியில் ஒரு நாற்காலியில் மூன்று பேர் உட்கார்ந்து பார்த்தார்களாம்! இப்படி எழுதுகிற கிசு



படிப்பகம்

www.padippakam.com

கிசு பத்திரிகைகள், ஒருவன் மூன்று பத்திரிகையாவது வாங்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் ரஜினியை விதவிதமாக படம்பிடித்து கிசுகிசு வெளியிடுகின்றன. ரசிகன் இருக்கையின் நுனியில் வந்துவிடும்படி திரைப்படத்தின் காட்சிகளில் விறுவிறுப்பு இருக்க வேண்டும் என்று திட்டமிடுகிற தயாரிப்பாளர் - இயக்குனர் போலவே, அடுத்த பத்திரிகைக்காக வாசகனை ஏங்க வைக்க வேண்டும் என யோசிக்கிறார்கள், மூளைவீங்கிகள். ''உதயமாகிறது எம்.ஜி.ஆர். முன்னணி'', ''ரஜினி அறிவிக்கப் போகும் முடிவு'', ''என் உயிர்க்கு என்ன பாதுகாப்பு - ரஜினி கேள்வி'', ''ரஜினியின் ரகசிய திட்டங்கள்'', ''முத்து விவகாரம் முந்துகிறது - ரஜினி சீற்றம்'' என்றெல்லாம் பரபரப்பூட்டி எழுதுகிறார்கள். ஒரு அரைவேக்காட்டை வைத்து முத்து திரைப்பட பாடலை விமர்சித்து எழுதிவிட்டு, ஒரு இசைமேதையிடம் கேட்டு எழுதியதாகவும் ''முத்து'' படத்தை முடக்க ஜெயாவும் ரஹ்மானும் சேர்ந்து சதி செய்ததாகவும் புளுகி பரபரப்பூட்டியது, நெற்றிக்கண் (30.10.95).

''நான் அரசியலுக்கு வரவில்லை'' என்று 27.10.95 அன்று ரஜினி அறிவித்தபின் ரசிகன் கூட முகத்தை தொங்கபோட்டுக் கொண்டுதான் போனான். முத்து திரைப்படத்தை மிகுந்த எதிர்பார்ப்புடன் வந்து பார்த்த ரசிகனும் சோர்வாகவே வீடு திரும்பினான். ஆனால் கிசுகிசு பத்திரிகையாளர்கள் சில வார்த்தைகளையும், வசனங்களையும் பிடித்துக் கொண்டு தொங்கி, விசிலடித்து குதூகலித்து வர்ணித்து எழுதுகிறார்கள். அ.தி.மு.க. குண்டர்களால் தாக்கப்பட்ட ரசிகர்கள், கொல்லப்பட்ட ரசிகர்கள் பற்றி ரஜினி 'அலட்டிக்' கொள்ளவே இல்லை; ''போலீசுக்கு ஒத்துழைப்பு கொடுங்கள்; முதலில் குடும்பத்தை பாருங்கள், நாட்டை பிறகு பார்க்கலாம்'' என்று ரஜினி கூறியபோதும் கிசுகிசு பத்திரிகைகளோ ''ரஜினி கொந்தளிப்பு, ஆவேசம்; ரஜினி அழைப்பு; எடுக்கப் போகும் பயங்கர முடிவு'' என்று எழுதின. ரஜினியின் அறிவுரைக்கும், பத்திரிகைகளின் பொய்களுக்கும் இடையில் சிக்கி விழிபிதுங்கி அலைகழிக்கப்பட்டவர்கள் ரஜினி ரசிகர்களே!

ரஜினி ரசிகர்களே வியக்குமளவிற்கு ரசிகர்களாகிப் போனார்கள், கிசுகிசு பத்திரிகையாளர்கள். ரஜினியின் உடை, நடை, பாவனைகளை சீட்டியடித்து ரசித்து எழுதுகிறார்கள். ''வா, சபாஷ் ரஜினி!'', ''ஜெயலலிதாவை 'ஸ்டேண்ட் ஆன் தி பெஞ்ச்' என்கிறார் ரஜினி'' என்று எழுதுகிறார், எம்.பி திருஞானம் (நெற். 9.10.95). ரஜினியை காந்தம் (ரஜினிகாந்தம் - ஜூ.வி. 15.10.95) என்று வர்ணிக்கிறார், பிரகாஷ் எம். ஸ்வாமி. இதுவரை ''சார்' என்று கூப்பிட்டவர்கள்கூட ''தலைவா'' என்று ரஜினியை அழைப்பதாக அவர்களுள் ஒருவராக பெருமைப்படுகிறது நக்கீரன். ரஜினி அறிக்கை வெளியிட்ட போது நிருபர்கள் அடித்த ''கமெண்ட்'' என்று 4.10.95 ஜூ.வி-யில் எழுதியிருப்பதே போதுமானது, நிருபர்கள் ரசிகர்களைக் காட்டிலும் தரம் தாழ்ந்து விட்டார்கள் என்பதற்கு. வெட்கமில்லாமல், ரஜினி போட்டிருந்த கறுப்பு உடைக்கு ஒரு விளக்கம், ''ஜெய்ஹிந்த்'' என்று கூறியதற்கு ஒரு விளக்கம் என புகழ்ந்து எழுதுகிறார்கள். வானொலி தமிழ்ச் செய்தியில் ''ஆஹாசவானி'', ''ஜெய்ஹிந்த்'' என்று வாசிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழர்கள், ரஜினியின் ''ஜெய்ஹிந்த்''திற்கு தலைவணங்குகிற கேவலமான நிலை இது.

ரஜினி ஒரு மேடையில் பேசும் போது ''நான் மனதில் பட்டதை யதார்த்தமாக பேசிவிடுவேன்'' என்று சுயதம்பட்டம் அடித்துக் கொண்ட பின்னும், ரஜினியின் குணநலனை அவர் யதார்த்த மனசு, பால் மனசு, மனதில் பட்டதை மறைக்காமல் பேசக் கூடியவர் என்று மீண்டும் மீண்டும் வர்ணித்து எழுதுகின்றன, கிசுகிசு பத்திரிகைகள். ஆனால் ஒரு பத்திரிகைக்குக் கூட, ரஜினி அரசியலுக்கு வருவது பற்றி ஆழம் பார்த்துக் கொண்டு பதவி ஆசை இல்லாதது போல் பேசி வருவதை கேள்வியெழுப்ப துப்பில்லை. ''ஒரு முறை சொன்னால் நூறு முறை சொன்ன மாதிரி'' என்பதுதான் ரஜினியின் வாழ்க்கை கோட்பாடு (?) என்று எழுதியுள்ளது, நெற்றிக்கண். ரஜினியின் கொள்கை என்ன என்று ஆய்வு நடத்துகின்றன பிற பத்திரிகைகள். பத்திரிகையாளர்களுக்கு பேட்டி கொடுத்தபோதும் ரஜினி மரியாதை இன்றி 'ஸ்டைலாக' சிகரெட் குடித்துக் கொண்டிருந்தார் எனக் குற்றச்சாட்டு எழுந்தது. உடன் கிசுகிசு பத்திரிகைகள் எல்லாம் ''ரஜினி அரசியலுக்கு வந்தால் குடி முதல் அனைத்தையும் விட்டு விடுவார்'' என்று வக்காலத்து வாங்குகின்றன.



தராசு ஆசிரியர் ஷ்யாம்.

ரஜினி அரசியலுக்கு வந்தால் வட்டச் செயலாளராகவாவது ஆகி சம்பாதிக்கலாம் என்ற நோக்கத்தோடுதான் பல ரசிகர்கள், மன்றங்களைப் புதுப்பிக்கிறார்கள் - தொடங்குகிறார்கள். ரஜினியோடு ஒட்டுகிற உதிர்ந்த முடிகளின் யோக்கியதை ஊருக்கே தெரியும். காங்கிரசு பணக்காரக்கட்சி என்கிற கருத்து தமிழக மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. ரஜினியின் பதவி, பண ஆசையும் வெளிப்படை. தமிழகத்தில் மட்டுமல்ல பெங்களூரிலும் ரஜினிக்கு சொத்து ஏராளம். திருமண மண்டபம், வீடு-மனைகள், அடுக்குமாடி கட்டிடங்கள், தொழிற்சாலைகள், அடைக்கலராஜுடன் இணைந்து வியாபாரம் என பலவற்றில் தனது கள்ளப்பணத்தை முடக்கி வைத்திருக்கிறார். இவை எதைப்பற்றியும் கிசுகிசு பத்திரிகைகள் கேள்வி எழுப்பவில்லை. உதிர்ந்த முடிகளின் பதவி வெறி - ஊழல்களை மட்டுமே ஒரு சில பத்திரிகைகள் சுட்டி காட்டி ரஜினி விழிப்புடன் இருக்க வேண்டும்; இருப்பார் என எழுதின. சில பத்திரிகைகள், ஒருபடி மேலே போய் ''சில்லறை பார்க்கும் நோக்கில் வருபவர்களுக்கு இடமிருக்காது, ரஜினி ராகவேந்திரா முன் தூய்மையான ஆட்சிக்கு சபதம் எடுக்கப் போகிறார்''; ''தனது குருவிற்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்'' என்று எழுதியுள்ளன.

தனிமனிதனின் நாடிபிடித்து - குறிப்பறிந்து வாழ்க்கையில் பொதுவாக நடப்பவற்றில் ஒரு ஐந்து விசயங்களை கூறி வைப்பான் ஜோசியக்காரன். அதே போல் ரஜினி அரசியலுக்கு வருவாரா மாட்டாரா, வந்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதில் பொதுவாக நடப்பவற்றை அனைத்தையும் எழுதி விடுகின்றன, கிசுகிசு பத்திரிகைகள். இதில் ஏதாவது ஒன்று நடந்துவிட்டாலோ லாட்டரி சீட்டுக் கடைக்காரன் ''பரிசு விழுந்தது'' என சுய விளம்பரம் தேடுவது போல், சொன்னது பலித்தது என ''காலரை'' தூக்கி விட்டுக் கொள்கின்றன. நடக்காதவற்றைப் பற்றி அயோக்கியத்தனமாக மௌனம் சாதிக்கின்றன.

இப்பத்திரிகைகளின் அரசியல் கிசுகிசுக்களும் ஓட்டு பொறுக்கி அரசியல்வாதிகளின் நடைமுறையும் ஒன்றாகவே பிரிக்க முடியாதபடி இருக்கிறது. இருவரும் ஒரே அலைவரிசையில்தான் சிந்திக்கிறார்கள்! பத்திரிகைகள் ஒன்று எழுதினால் அரசியல் கழிசடைகள் அதற்கும் மேலாக நடப்பதும் பின்னர் அடுத்தக் கட்டத்திற்குப் போய் பத்திரிகைகள் கிசுகிசுப்பதுமாக போட்டிப் போட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். இச் சமூக அமைப்பின் சீழ், அரசியல் சீரழிவுகளில் மட்டுமல்ல, கிசுகிசு பத்திரிகைகளிலும் வெளிப்படுகிறது. ஆளும் வர்க்கத்தின் அழிவுக்கு முட்டுக் கொடுக்க வரும் கவர்ச்சி - பொறுக்கி அரசியலின் நாயகன் ரஜினியின் உண்மை நிலையை மக்கள் - வாசகர்கள் உணராமல் தடுப்பதும் திசை திருப்பி மாயையில் ஆழ்த்துவதும் கிசுகிசு பத்திரிகைகளின் பணியாக இருக்கிறது.

● மாதவன்



படிப்பகம்

www.padippakam.com

# ஈழம்: இனப் படுகொலைகளால் விடுதலைப் போர் அடங்காது.

*சிங்கள இனவெறி ராணுவத்தின் முப்படைகளும் சேர்ந்து யாழ் மாகாணத்தின் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்தி, இப்போது யாழ் நகரைக் கைப்பற்றி விட்டதாகச் செய்திகள் வருகின்றன. அப்பட்டமான இனப்படுகொலையைக் கட்டவிழ்த்து விட்டு, குறிப்பிட்ட ஒரு சண்டையில் சிங்கள ராணுவத்தின் கை மேலோங்கியிருப்பதை வைத்து அது போரில் வெற்றி பெற்று விட்டதாகத் தீர்மானித்து விட முடியாது. இனவெறி அடக்குமுறை - பயங்கரவாதத் தாக்குதல்களால் ஈழ மக்களின் சுய நிர்ணய உரிமைப் போர் தோல்வியடைந்து விடவும் முடியாது.*

ஈழத்தில் சிங்கள இனவெறி ராணுவம் நடத்தி வரும் பயங்கரவாதப் போரினால் யாழ் மாகாணம் மயான பூமியாக மாறி வருகிறது. தமிழர் குடியிருப்புப் பகுதிகளில் சிங்கள ராணுவம் மேற்கொண்டுள்ள குண்டு வீச்சுத் தாக்குதலால் நூற்றுக்கும் மேற்பட்ட பச்சிளம் குழந்தைகள் உள்ளிட்டு, ஆயிரத்துக்கும் மேலான ஈழத் தமிழர்கள் கோரமாக கொல்லப்பட்டுள்ளார்கள். தமிழ் மக்களின் உயிர்களும் உடமைகளும் பண்பாட்டுச் சின்னங்களும் தேசிய செல்வங்களும் சிங்களப் பேரினவாத அரசின் முப்படைகளால் அழிக்கப்பட்டு வருகின்றன. ''ஷெல்'' தாக்குதலுக்கு அஞ்சி பள்ளிகள், மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்களில் தஞ்சமடைந்த மக்கள் மீதே சிங்கள இனவெறி ராணுவம் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி வருகிறது. நாவலியிலுள்ள செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்த மக்கள் மீது சிங்கள ராணுவம் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலால் 120 பேர் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் பெண்களும் குழந்தைகளும் தான்!

தொடரும் ''ஷெல்'' தாக்குதலுக்கு அஞ்சி 5 லட்சத்துக்கும் அதிகமான ஈழத் தமிழர்கள் யாழ் மாகாணத்தை விட்டு தெற்கே தப்பியோடி, சொந்த மண்ணிலேயே அகதிகளாக அல்லற்படுகிறார்கள். கொட்டும் மழையில் தங்குவதற்குக் கூட இடமில்லாமல் கைக்குழந்தைகளுடன் தாய்மார்கள் பட்டினியால் பரிதவிக்கிறார்கள். மனிதாபிமான அடிப்படையில் சில வெளிநாடுகள் ஈழத்தமிழருக்கு அனுப்பிய உணவு - மருந்துப் பொருட்களை ஏற்க மறுத்தும், புலிகளுக்கு ஆதரவானது என்று கூறி செஞ்சிலுவைச் சங்கத்தைச் செயல்பட விடால் தடுத்தும் சிங்கள இனவெறி அரசு, ஈழத்தமிழர்களை தொற்றுநோய்க்கும் பட்டினிக்கும் பலியாக்கி வருகிறது.

மாபெரும் ஜனநாயகவாதியாக சுய தம்பட்டம் அடித்துக் கொண்ட அதிபர் சந்திரிகாவின் சமாதானப் பித்தலாட்டங்கள் வெகு விரைவிலேயே அம்பலமாகி, அவர் ஒரு கடைந்தெடுத்த இனவெறி பாசிஸ்டுதான் என்பதை தொடரும் இனப்படுகொலைகள் நிரூபித்துக் காட்டி விட்டன. ''பயங்கரவாதப் புலிகளுக்கு எதிரான போர்'' என்ற பெயரில் நடக்கும் அப்பட்டமான இனப்படுகொலையை உடனடியாக நிறுத்தக் கோரி, ஈழத்தமிழர் கட்சிகளும் உலக நாடுகளும் விடுத்த வேண்டுகோளைப் புறக்கணித்து விட்டு, ''முதலில் போர்; பிறகு தான் சமாதானம்!'' என்று சந்திரிகா அரசு கொக்கரிக்கிறது. தமிழீழத்தின் வடக்கில் பயங்கரவாதப் போரைக் கட்டவிழ்த்து விடுவது, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளைக் கைப்பற்றி புலிகளை அழித்தொழித்து விட்டதாக பிரமையூட்டுவது, ஈழத்தின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாகப் பிரித்து ஈழத் துரோகிகளைக் கொண்டு பொம்மையாட்சியை நிறுவுவது; ஈழத் தமிழருக்கு சுயாட்சி உரிமை வழங்கி விட்டதாக ஜனநாயக மாய்மாலம் செய்வது என்கிற முந்தைய சிங்கள இனவெறி ஆட்சியாளர்களின் பாதையில் தான் சந்திரிகாவும் அடியொற்றிச் செல்கிறார். எதிர்பார்த்தபடியே, புலிகளை எதிர்க்கும் ஈழத் துரோகக் கட்சிகள் அனைத்தும் தற்போது ஓரணியில் திரண்டு போரை நிறுத்துமாறும் சமரசப் பேச்சு வார்த்தைக்கு வருமாறும் சந்திரிகாவிடம் கோரியுள்ளன.

புலிகளின் ஏவுகணைத் தாக்குதலால் கொழும்பில் எண்ணெய் கிடங்குகள் பற்றி எரிந்த போது, ஓடோடிச் சென்று தீயை அணைக்க உதவிய இந்திய அரசு, இப்போது ஈழமே பற்றி எரிந்து இனப்படுகொலைகள் தொடரும்போது வாய்மூடி மௌனம் சாதிக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளைத் தூக்கிலிட்ட நைஜீரிய ராணுவ சர்வாதிகார ஆட்சியைக் கண்டனம் செய்யும் இந்திய அரசு, அண்டை நாடான இலங்கையில் ஈழத்தமிழர்கள் நரவேட்டையாடப் படும் போது மேல் வாயையும் கீழ்வாயையும் மூடிக் கொள்கிறது. ஈழத் துரோகி வரதராசப் பெருமாளுக்குத் தஞ்சமளித்து பாதுகாத்து, பராமரித்து வரும் இந்திய அரசு, தற்போதைய போரினால் ஈழத்தமிழ் அகதிகள் இந்தியாவுக்குள் நுழைந்து விடாமல் கடலோரப் பகுதிகளில் கண்காணிப்பு - தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அல்லற்படும் ஈழத்தமிழர்களுக்கு தமிழகத்தி லிருந்து உணவு மற்றும் நிவாரண உதவிகள் கிடைத்து விடாமல் கடற்படைகளைக் கொண்டு தடுத்து வருகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, சிங்கள போர் விமானங்களை புலிகள் சுட்டு வீழ்த்திய பிறகு, ரஷ்யாவிடமிருந்து சந்திரிகா அரசு வாங்கியுள்ள போர் விமானங்களை இந்திய ராணுவ விமானிகள் தான் ஓட்டுகிறார்கள் என்ற அதிர்ச்சியூட்டும் செய்தி இப்போது மெதுவாகக் கசிந்துள்ளது. ஈழத்

சிங்கள ராணுவ வெறிக்கு அப்பாவி தமிழர்கள் பலி.





படிப்பகம்

www.padippakam.com

தமிழர்களை கொன்றொழிக்க சந்திரிகா அரசுக்கு திரை மறைவில் உதவி வந்த இந்திய அரசு, இப்போது நேரடியாகவே போரில் ஈடுபடுவதன் மூலம் பிற்போக்கு - அடக்குமுறை வல்லாதிக்க அரசுதான் என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டி விட்டது.

இத்தனைக்கும் பிறகும், ஆக்கிரமிப்பு - அடக்குமுறையாளனாக அம்பலப்பட்டு நிற்கும் இந்திய அரசு ஈழ விவகாரத்தில் தலையிட்டு போரை நிறுத்த வேண்டும்; ஈழத்தமிழர்களைக் காக்க வேண்டும் என்று திராவிடக் கட்சிகள் வெட்கமின்றி கோருகின்றனர். ஈழத் தமிழர் படுகொலைக்கு எதிராக கண்டன ஊர்வலம் நடத்திய தி.மு.க. ''மனிதாபிமான அடிப்படையில் இந்திய அரசு தலையிட வேண்டும்'' என்கிறது. ''இந்தியாவுக்குப் புலிகள் எதிரிகளல்ல; இந்தியா தனது வல்லாதிக்கத் தன்மையை நிலைநாட்டும் வகையில், ஈழ விவகாரத்தில் தலையிட வேண்டும்'' என்கிறார் பழ. நெடுமாறன். அன்று, பாகிஸ்தானைத் துண்டாடி வங்க தேசத்தை 'விடுதலை' செய்து விசுவாச ஆட்சியை இந்தியா நிறுவியதைப் போலவே, இப்போது ஈழத்தையும் 'விடுதலை' செய்ய இந்தியா தலையிட வேண்டுமென்பதே இந்தத் தமிழனத் 'தளபதி'களின் லட்சியமாக உள்ளது.

மறுபுறம், தமிழகப் பார்ப்பன பத்திரிகைகளோ ஈழம் பற்றி எரியும் போது, கழிசடை சினிமா நாயகன் ரஜினியின் துதிபாடிக் கொண்டு தமிழின உணர்வை மழுங்கடித்து வருகின்றன. ஈழத்தில் போர் முடிவுக்கு வந்து விட்டதாகவும், புலிகள் தோல்வியடைந்து விட்டதாகவும் பிரமையூட்டி உளவியல் யுத்தத்தை நடத்தி வருகின்றன.

கொரில்லாப் போர்முறை விஞ்ஞானத்தை அறிந்துள்ள எவரும் தற்போதைய போரில் புலிகள் தோல்வியடைந்து விட்டதாக முடிவுக்கு வரமுடியாது. கொரில்லாப் போர் முறை விதிகளின் படி புலிகள் திட்டமிட்ட பின்வாங்குதலை மேற்கொண்டு அடுத்த தாக்குதலுக்குத் தயாராகி வருகிறார்கள் என்பதே உண்மை. அதே சமயம் எதிரிகளின் ஊடுருவல், துரோகிகளின் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையால் பெருத்த இழப்புகளைச் சந்தித்துள்ள புலிகள், ஈழ விடுதலையில் ஊன்றி நிற்கும் அனைத்து போராளிகளையும், ஜனநாயக சக்திகளையும் அரவணைத்துச் செல்லாமல் சுய நிர்ணய உரிமைப் போரில் ஒரு போதும் வெற்றி பெற முடியாது என்பதை இப்போதாவது உணர வேண்டும். சிங்கள பேரினவாத அடக்குமுறையை முறியடிக்கவும், ஈழத் துரோகிகளை தனிமைப்படுத்தவும், சொந்தக் காலில் நின்று ஈழத்தின் சுய நிர்ணய உரிமையைச் சாதிக்கவும் இது மிகவும் அவசியமாகும்.

● பாலன்

# இந்து முன்னணியல்ல பார்ப்பன முன்னணிதான்

''சாதி பேதமற்ற முறையில் இந்துக்களைத் திரட்டி, அவர்களின் நலன் ஒன்றிற்காக மட்டுமே, தான் போராடி வருவதாகத்'' தமிழ் நாடெங்கும் மார்தட்டி வந்தது இந்து முன்னணிக் கும்பல். இன்று அதன் சாயம் வெளுத்துப் போய், பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதோர் என்ற வகையில் தமிழ்நாடெங்கும் அவ்வியக்கத்தில் பிளவு வெடித்து வருகிறது. கடந்த அக்டோபர் மாதம் சென்னையில் நடந்த செயல் வீரர்கள் கூட்டத்தில், அதிருப்தியாளர்கள் சென்னை மாவட்டப் பொறுப்பாளர் சோமசுந்தரம் தலைமையில் கூடி, ''இந்து முன்னணியின் அமைப்பாளரும் தலைவருமான இராம. கோபாலனை வெளியேற்றுவதாக'' அறிவித்தனர். இதற்குப் பதிலடியாக இராம. கோபாலன் தனது ஆதரவாளர்களைத் திரட்டி, சென்னை மாவட்டப் பொறுப்பாளர்கள் நால்வரை நீக்குவதாக அறிவித்தார். இவ்வியக்கம் சற்றே விரைவாக இருக்கும் கோவை, ஈரோடு, கன்னியாகுமரி, உடன்குடி பகுதிகளிலும் இராம. கோபாலனை எதிர்க்கும் பார்ப்பனர் அல்லாதோர் அணி வலுவாக இருப்பதாகச் செய்திகள் வெளிவருகின்றன.

''இந்து முன்னணியின் மாநிலத் தலைவராக இருந்த இராச கோபாலன் கொலையில் அ.தி.மு.க. எம்.பி. இராசன் செல்லப்பாவிற்குத் தொடர்பு இருப்பதனை மறைக்க முயலுவது; ஜெயா ஆட்சியில் காயிதே மில்லத் பெயர் நாகை மாவட்டத்திற்கு வைத்த பின்பு, கருணாநிதி காலத்தில் நடந்ததைப் போன்று போராட்டங்களை அறிவிக்காமல் இருப்பது; இந்து வியாபாரிகள் மாநில சங்கத் தலைவர் கோழிக்கடை கஜா, குடிசை மாற்று வாரியத் தலைவர் பாலகங்காவினால் தாக்கப்பட்டதை எதிர்க்காதது'' - இவற்றை சாதிப் பற்றின் காரணமாக ஜெயா ஆட்சிக்கு இந்து முன்னணியின் பார்ப்பனத் தலைமை தாளம் போடுவதற்கு ஆதாரங்களாகக் காட்டுகிறார்கள் அதிருப்தியாளர்கள். மேலும் பைபிள் சன்முகம், நாகூர் முத்துக் கிருஷ்ணனின் மனைவி குண்டு வெடித்து இறந்து போனதற்கு உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை; மாறாக, இவர்கள் பெயரிலும் இன்னும் பலர்பெயரிலும் அறக்கட்டளைகளை நிறுவி ''இராமகோபாலன் பணத்தைச் சுருட்டிக் கொள்கிறார்'' எனக் குற்றஞ் சுமத்தப்படுகிறது.

இவை மட்டுமின்றி, இந்துக்கள் மத்தியில் சாதி பேதமில்லை எனக் காட்டுவதற்கு சென்னை மாவட்டக் கமிட்டி, ''அரிசனனுக்கும் பூணூல், அந்தணனுக்கும் பூணூல்'', ''அனைவரும் அர்ச்சகராகும் உரிமை'' என்ற வகையில் இயக்கங்களைக் கட்டியமைக்கத் தலைமையைக் கோரியுள்ளது. இவற்றைக் கிண்டலடித்

இலங்கை தூதரகம் முன்பு இராம. கோபாலன் எதிர்ப்பாளர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்



www.padippakam.com

துப் புறக்கணித்துள்ளது இந்து முன்னணியின் பார்ப்பனத் தலைமை. மேலும் திருப்பராய்த்துறையில் நடந்த பொதுக்குழுவில் ''தேசத் துரோகி சி.பி. இராமசாமி அய்யர்'' எனத் தொடங்கிய தீர்மானத்தை எதிர்ப்புகளை மீறி ரத்து செய்துள்ளார் இராம. கோபாலன். இவற்றை பார்ப்பன ஆதிக்கத்தின் அடையாளங்களாகச் சுட்டிக் காட்டுகிறார்கள், அதிருப்தியாளர்கள்.

மேலும் களப்பணி ஆற்றாத பார்ப்பனர்களுக்குத் தலைமை பொறுப்புகள் கொடுப்பது, இட ஒதுக்கீடு, ஆர்.எஸ்.எஸ். ஆதிக்கம் போன்ற விசயங்களில் பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதவர்களிடையே இயக்கத்தினுள் முரண்பாடு எழுந்து வந்துள்ளது. நீறு பூத்த நெருப்பாக இருந்த இப்பிரச்னைகள், இம் மதவெறி அமைப்பில் மிகத் தீவிரமாகப் பணியாற்றிய ஆசாரி இனத்தைச் சேர்ந்த ஸ்ரீதரனின் செல்வாக்கு பெருகுவது கண்டு ஒதுக்கப்பட்டதையடுத்தும், சென்னை திருவல்லிக்கேணியில் விநாயகர் ஊர்வலத்தில் போலீசார் தடியடி நடத்தியதைக் கண்டிக்காது இராம. கோபாலன் பாராட்டியதைத் தொடர்ந்தும் பகிரங்கமாக வெடித்துக் கிளம்பியது.

> பார்ப்பனர் - பார்ப்பனர் அல்லாதோர் இடையே ஏற்பட்டுள்ள பிளவின் மூலம் ''எல்லோரும் இந்துக்கள்'' என்ற முழக்கம் இந்து முன்னணிக்குள்ளேயே பொய்த்துப் போய் விட்டது.

இந்து மதவெறி அமைப்புகள் மக்களைத் திரட்டவும், அதிகாரத்தைக் கைப்பற்றும் வண்ணம் வளர்த்த பின்பு இது வரை வெளியே தெரியாமல் இருந்த அதன் மேல் சாதி வெறி கோர முகமும் அதிகாரப் போட்டிகளும் சந்தி சிரிக்கத் தொடங்கியுள்ளன. ஓட்டுக் கட்சி அரசியல் வாழ்வில் குருகுலப்பாணி அடக்கத்தைப்பின்பற்றக்கோரும்ஆர்.எஸ்.எஸ்.-இன் கட்டளைகள் அதிருப்தியாளர்களால் அடிக்கடி மீறப்படுகின்றன. உ.பி.யில் கல்யாண் சிங் கோஷ்டி, குஜராத்தில் படேல்-வகேலா கோஷ்டி இன்னும் மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், இராசஸ்தான், டெல்லி எங்கும் கோஷ்டிப் பூசல்கள் நிரம்பி வழிகின்றன. தமிழ்நாட்டில் இந்து முன்னணியில் நிலவிய பார்ப்பன ஆதிக்கமும் சாதிப்பற்றும் பிளவுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

ஆனாலும் அதிருப்தியாளர்களின் தலைமையிலும், அணிகளிலும் ஒரு சிலரைத் தவிர பலர் அமைப்பில் நிலவிய பார்ப்பன ஆதிக்கம் குறித்தும், அது பிளவுக்கு காரணமாக அமைந்தது குறித்தும் வினவும் பொழுது, பட்டும் படாமலும் தான் பதில் கூறுகிறார்கள். அதே பொழுதில் இந்து முன்னணியின் அடிப்படைக் கோரிக்கைகளையே தாங்களும் ஏற்றுக் கொள்வதாகவும், இனி தாங்கள் தான் உண்மையான இந்து முன்னணியென்றும் உள்ளார்ந்த இந்து மதத்தின் பெருமைகளை எடுத்துக் கூறி சாதி ரீதியாகப் பிளவுண்டு கிடக்கும் இந்துக்களைத் திரட்டப் போவதாகவும் இவர்கள் கூறுகிறார்கள். இது இவர்களின் அறியாமையையே காட்டுவதாக உள்ளது. காரணம், ஆர்.எஸ்.எஸ். தான் அங்கீகாரம் அளித்திருக்கும் இராம. கோபாலனின் இந்து முன்னணியை எதிர்க்கும் இவர்களுக்கு 'இந்து' என்ற அங்கீகாரம் தரப்போவது கிடையாது. இந்து மதம் என அழைக்கப்படுவதே பார்ப்பனீய - சனாதன தர்மத்தை, சாதீய ஒடுக்கு முறையை அடிப்படையாகக் கொண்டது. சிறுபான்மையினர் மீது - குறிப்பாக முஸ்லீம் எதிர்ப்பு வெறியூட்டியும், இதன் அடிப்படையிலேயே போலி தேசிய வெறியூட்டப்பட்டும் தான் இந்துக்கள் இந்து மதவெறி அமைப்புகளில் அணி திரட்டப்படுகிறார்கள். இந்தப் பிறவிக்குறி தவிர்க்க இயலாதவாறு அதிருப்தியாளர்கள் அணியிலும் காணக் கிடக்கிறது.

ஈழப் பிரச்சினையை தேசிய இனப் பிரச்சினையாகக் காணாமல், ஈழ இந்துக்களின் பிரச்சினையாகக் குறிப்பிடுவதில் இருந்தே இந்த அதிருப்தியாளர்களின் கண்களை எந்த அளவுக்கு காவிச் சாயம் மூடி மறைத்துள்ளது எனப் புரிந்து கொள்ளலாம். மேலும் அதிருப்தியாளர்கள் மத்தியில் மிகப் பிரபலமான தலைவர்களாகத் திகழும் ஸ்ரீதரன், அர்ஜுன் சம்பத் போன்றோரும் இன்னும் பலரும் ஆர்.எஸ்.எஸ்-னால் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் தான், இதுநாள் வரை முஸ்லீம் எதிர்ப்பு வெறிக் கூச்சல் போட்டும், கலவரங்களை முன்னின்று தூண்டி விட்டவர்கள் தான். எனவே இராம. கோபாலனுக்குப் போட்டியாக இவர்களும் சிறுபான்மையினர் மீது காழ்ப்புணர்ச்சிகளைக் கொட்டித்தான் இந்துக்களை அணிதிரட்டுவார்கள்; அணிகளைத் தக்க வைத்துக் கொள்வார்கள். ''சில்லரை சீர்திருத்தங்களின் மூலமே சாதீய ஒடுக்கு முறையை ஒழித்து விடலாம்'' என மேடைகளில் வாய்ப் பந்தல் போடுவார்கள். எனவே பார்ப்பன இராம. கோபாலனிடம் மட்டுமல்ல; பார்ப்பனர் அல்லாதோர் எனும் போர்வையில் இந்து மதப் போதையூட்டக் கிளம்பியிருக்கும் இவர்களிடமும் பிற்பட்டோரும் தாழ்த்தப்பட்டோரும் ஏமாந்து விடாது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

● செல்வம்



தாழ்த்தப்பட்டவர் சாதிவெறிக்கு பலி!

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் வேற்காடு அண்ணாநகர் பகுதி தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்புப் பகுதியாகும். இம்மக்களை இப்பகுதியில் வாழ்ந்து வரும் படகர் இனத்தவர் நெடுங்காலமாகவே கீழ்சாதி என முத்திரை குத்தி அடக்கி ஒடுக்கி வருகின்றனர். இச்சாதீய ஒடுக்குமுறைக்கு எதிராக தாழ்த்தப்பட்டோர் ''மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம்'' எனும் அமைப்பில் இணைந்து போராடத் துவங்கினர். கடந்த அக்டோபர் 2-ந் தேதியன்று உரிமைப் பேரணியொன்றை நடத்தினர். அவ்வூர்வலம் முடிந்து தங்கள் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட இளைஞர்களான பழனிவேல், இரவிசந்திரன், செல்லத்துரை, செல்வராஜ் ஆகியோருக்கும் படகர் இனத்தைச் சேர்ந்த தருமன் கோஷ்டிக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் ஆத்திரமாகிப் போன தருமன் கோஷ்டி அவ்விளைஞர்களைக் கத்தி, அரிவாள், கம்பு போன்ற ஆயுதங்களைக் கொண்டு தாக்கி, அருகிலிருந்த தேநீர்க் கடையில் பூட்டி சிறை வைத்தது. இதனிடையே போலீசுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அப்பகுதியின் காவலுக்காக இரு போலீசார் அனுப்பப்பட்டனர். சிறிது நேரத்திலேயே 50 பேர் அடங்கிய கும்பலொன்று ஆயுதங்களுடன் அப்பகுதியினுள் நுழைந்து போலீசாரின் கண்ணெதிரிலேயே சிறை வைக்கப்பட்டிருந்த அவ்விளைஞர்களை தாக்கத் தொடங்கினர். இதில் பழனிவேல் என்ற இளைஞர் இறந்துவிட்டார். பிற மூவர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சாதீய ஒடுக்கு முறையினையும், படுகொலையையும் அம்பலப்படுத்தி மலையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தினர் சிறு சிறு துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளதுடன், தருமன் கோஷ்டியைத் தண்டிக்கக் கோரி கடையடைப்புப் போராட்டத்திற்கும் அழைப்பு விடுத்தனர். தகவல்: அகரம் சிவசுப்பிரமணியன்


படிப்பகம்

www.padippakam.com



## இருண்ட கண்டத்தில் மின்னிடும் தாரகை

நைஜீரியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியான சாரோ - விவாவை அந்நாட்டு ராணுவ சர்வாதிகாரிகள் தூக்கிலிட்டுக் கொன்றதை அறிந்து உலகமே அதிர்ச்சியடைந்து கண்டனக் குரல் எழுப்பி வருகிறது.

மேற்கு ஆப்பிரிக்காவின் தென் பகுதியிலுள்ள சிறிய நாடான நைஜீரியாவில், உலகின் மிகப் பெரிய பன்னாட்டு . ஏகபோக எண்ணெய் நிறுவனமான ''ஷெல்'', அந்நாட்டின் எண்ணெய் வளத்தை உறிஞ்சிக் கொழுத்து வருவதோடு, வளமான நைஜர் நதியின் கழிமுகப் பகுதியையே நஞ்சாக்கிவிட்டது. கடந்த 30 ஆண்டுகளாக ''ஷெல்'' மற்றும் பிற ஏகாதிபத்திய எண்ணெய் நிறுவனங்களின் வேட்டைக் காடாக மாறிவிட்ட நைஜீரியாவின் சுற்றுச் சூழலே நஞ்சாகி ஓகோனி பிராந்தியத்தில் அமில மழை பொழிகிறது. வெறிபிடித்த எண்ணெய் துரப்பண மற்றும் சுத்திகரிப்பால் இப் பிராந்தியத்தில் பரவும் எண்ணெய் படலத்தால் அரிய உயிரினங்களும் விலங்குகளும் மீன்களும் தாவரங்களும் அழிந்து விட்டன. இப்பகுதியின் பூர்வகுடிகளான ஓகோனி இன மக்கள் வாழ்விழந்து நிற்கின்றனர்.

சுற்றுச்சூழலை நஞ்சாக்கி தமது வாழ்வையே நாசமாக்கி விட்ட ''ஷெல்'' நிறுவனத்தை எதிர்த்து கழிமுகப் பகுதியிலுள்ள ஓகோனி மக்கள் நீண்ட காலமாகப் போராடி வருகிறார்கள். ஏகாதிபத்திய கைப்பாவைகளான நைஜீரிய ராணுவ சர்வாதிகாரிகள் இம்மக்களின் போராட்டத்தை மிருகத்தனமாக ஒடுக்கி, கடந்த பத்தாண்டுகளில் 1800 பேரைக் கொன்றொழித்துள்ளனர்.

ஏகாதிபத்திய எண்ணெய் நிறுவனங்களின் ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடி வரும் ''ஓகோனி மக்களின் வாழ்வுரிமை இயக்கம் (MOSOP) ''என்ற அமைப்பின் தலைவராக உள்ள 53 வயதான கென்சாரோ - விவா, நைஜீரியாவின் பிரபலமான எழுத்தாளரும் கவிஞரும் நாடக ஆசிரியருமாவார். 1995-ம் ஆண்டுக்கான ஆப்பிரிக்க சுற்றுச்சூழல் கோல்டுமேன் விருதைப் பெற்றவர். ''ஷெல்'' நிறுவனத்துக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடிய 'குற்றத்'திற்காக ஏற்கனவே பலமுறை கைது செய்யப்பட்ட இப்போராளி மீது, பொய்யான கொலைக் குற்றங்களைச் சுமத்தி கடந்த ஆண்டு மத்தியில் ராணுவ சர்வாதிகாரிகள் இவரையும் முன்னணியாளர்கள் 43 பேரையும் கைது செய்து கால்களில் இரும்புச் சங்கிலி பூட்டி இருட்டுச் சிறையில் அடைத்தனர். அவரை மருத்துவர்களோ, வழக்குரைஞர்களோ ஏன், உறவினர்கள்கூட சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டது. கடந்த எட்டு மாதங்களாக விசாரணை நாடகமாடிய ராணுவ சர்வாதிகாரிகள், கடந்த நவம்பர் 10-ம் நாளன்று இப்போராளியையும் முன்னணியாளர்கள் 9 பேரையும் தூக்கிலிட்டுக் கொன்றுள்ளனர். இக் கொடுஞ்செயலை எதிர்த்து நைஜீரிய மக்களும், உலகெங்குமுள்ள சுற்றுச்சூழல், மனித உரிமை அமைப்புகளும் கண்டனப் பேரணிகள் - ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். அது ஏகாதிபத்திய எதிர்ப்புப் பெருந்தீயாக பற்றிப் படர்ந்து வருகிறது.

இந்நிலையில், ஏகாதிபத்திய வல்லரசுகளும் நைஜீரியாவின் மனித உரிமை மீறல், ராணுவ அடக்குமுறையை எதிர்த்து சவடால் அடிக்கக் கிளம்பியுள்ளன. ஆனால், ''ஷெல்'' நிறுவனத்துக்கு எதிரான போராட்டத்தை ஒடுக்கி, போராளிகளைத் தூக்கிலிடுமாறு ராணுவ சர்வாதிகாரிகளுக்குக் கட்டளையிட்டதே, இதே ஏகாதிபத்திய வல்லரசுகள் தான்! தற்போதைய நைஜீரிய ராணுவ ஆளுங் கும்பலுக்கு நெருக்கடிகள் கொடுத்து தமது நவகாலனிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வது அல்லது புதியதொரு விசுவாச கும்பலை ஆட்சியில் அமர்த்துவது என்ற நோக்கத்தோடுதான் ஏகாதிபத்திய வல்லரசுகள் இப்போது ஜனநாயக வேஷங்கட்டி ஆடக் கிளம்பியுள்ளன.

தூக்கிலிடப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி கென்-சாரோ-விவா



## நிவாரண உதவியிலும் சாதிவெறி அடக்குமுறை

மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள லத்தூரில் பூகம்பப் பேரழிவு ஏற்பட்டு ஈராண்டுகளுக்கு மேலாகிவிட்டது. நில நடுக்கப் பேரழிவுக்குள்ளான கிலாரி எனும் சிறு நகரில் உலக வங்கியின் கடனுதவியுடன் ஆறு மாதங்களுக்கு முன்பு 127 வீடுகள் கட்டப்பட்டன. இவற்றில் 12 வீடுகள் தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் அவ்வீடுகளில் குடியேற விடாமல் பட்டீல், லிங்காயத்து மேல்சாதி வெறியர்கள் தடுக்கக் கிளம்பினர். ஏனெனில் தமது வீடுகளுக்கு அருகே தலித்துகள் குடியிருக்க அவர்களது சாதிவெறி இடங்கொடுக்கவில்லை. மேல் சாதி வெறி பிடித்த அதிகார வர்க்கமும் தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளை ரத்து செய்து, சுடுகாட்டின் அருகே அவர்களுக்கு வீட்டுமனைகளை ஒதுக்கியது. இச்சாதியக் கொடுமையை எதிர்த்து உஸ்மானாபாத் மாவட்ட முழுவதுமுள்ள தலித்துகள் திரண்டு உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர். அப்போதைய மாவட்ட ஆட்சியாளர் ஒதுக்கப்பட்ட வீடுகள் தலித்துகளுக்கே தரப்படும் என்று உறுதியளித்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். இதைத் தொடர்ந்து புதிய மாவட்ட ஆட்சியாளர் பதவிக்கு வந்த பிறகும் தலித்துகளுக்கு வீடுகள் கிடைக்கவில்லை. எனவே மீண்டும் கடந்த மே மாத இறுதியில் கொட்டும் மழையிலும் கூட குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான தலித்துகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதமிருந்தனர்.

''இந்த வீடுகள் உங்கள் அப்பனுடையதா? கீழ்ச்சாதி நாய்களே! '' என்று சாதிவெறியோடு மிரட்டிய மாவட்ட ஆட்சியாளரான அரவிந்த் குமார், போராடிய தலித்துகள் மீது போலீசை ஏவி அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டார்.



படிப்பகம்

www.padippakam.com



அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலையாகும் உரிமையும் மறுக்கப்பட்டு அவுரங்காபாத் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனாலும் தலித்துகள் அடக்குமுறையைக் கண்டு அஞ்சி நடுங்கிடவில்லை. சாதிவெறி பிடித்த மாவட்ட ஆட்சித் தலைவர் அரவிந்த் குமாரை பதவியிலிருந்து நீக்கக் கோரி மீண்டும் போராட்டத்தைத் தொடர்ந்தனர். பீதியடைந்த மேல்சாதி அதிகார வர்க்கம் நிலைமை விபரீதமாகிவிட்டதைக் கண்டு அஞ்சி, அரவிந்த் குமாரை இடமாற்றம் செய்துள்ளதோடு, கிலாரியில் ஒதுக்கப்பட்ட வீடுகளை தலித்துகளிடமே ஒப்படைப்பதாக உறுதியளித்துள்ளது.

நிலநடுக்கம் பேரழிவு ஏற்பட்டபோது. தலித் பிணங்களை மீட்க மறுத்தும், சாதிவெறியோடு தலித்துகளுக்கு தனியே நிவாரண முகாம் அமைத்தும் அதிகார வர்க்கம் ஆட்டம் போட்டது. இன்று தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளைத் தராமல் முட்டுக்கட்டை போட முயற்சிக்கிறது. அரசு எந்திரம் எந்த அளவுக்கு சாதிவெறியில் மூழ்கிக் கிடக்கிறது என்பதை இச்சம்பவம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

## ஆப்கான்: யுத்தப் பிரபுக்களின் காலடியில்

இந்தியாவின் அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் கடந்த இரு மாதங்களாகத் தீவிரமாகியுள்ள உள்நாட்டுப் போரினால் அந்நாடும் மக்களும் சொல்லொண்ணாத் துயரத்தில் சிக்கித் தவிக்கிறார்கள். ஆப்கானின் தென்பகுதி முழுவதையும் கைப்பற்றி விட்ட தாலிபான் இயக்கம், தலைநகர் காபூலைக் கைப்பற்ற முன்னேறிக் கொண்டிருக்கிறது. அரசு படைகளுக்கும் தாலிபான் படைகளுக்குமிடையே தொடரும் போரினால், கண்டகார், ஹெராத் நகரங்களும் தலைநகர் காபூலும் இடிபாடுகளுடன் சிதிலமடைந்து நிற்கின்றன.

ஆப்கானில் ரஷிய ஆதரவு பெற்ற ராணுவ சர்வாதிகாரியான நஜிபுல்லாவின் ஆட்சி தூக்கியெறியப்பட்ட பிறகு, அதிகாரத்தைக் கைப்பற்ற பல்வேறு இனக்குழுக்களின் யுத்தப் பிரபுக்கள் தொடர்ந்து மோதிக் கொண்டு வருகின்றனர். ஆப்கானில் பஷ்டூன் இனத்தவர்கள் ஏறத்தாழ 50% உள்ளனர். வடபகுதியில் தாஜிக், உஸ்பெக், ஹசாரா இனங்களும் இன்னும் பல சிறிய இனங்களும் உள்ளன நஜிபுல்லா ஆட்சி கவிழ்ந்த பிறகு நடந்த உள்நாட்டுப் போர் - ஆட்சிக் கவிழ்ப்புகளைத் தொடர்ந்து, தாஜிக் இனத்தைச் சேர்ந்த ரப்பானி - மஸூத் யுத்த பிரபு கும்பல் அதிகாரத்தைக் கைப்பற்றியது. இதற்கெதிராக, உஸ்பெக் இனத்தின் யுத்தப் பிரபுவான தோஸ்தம் தலைமையிலான படைகளும், தெற்கே பஷ்டூன் இனத்தின் யுத்தப் பிரபுவான ஹெக்மத்தியார் மற்றும் பாக். ஆதரவு பெற்ற தாலிபான் இயக்கப் படைகளும் தொடர்ந்து போரிட்டு வருகின்றன.



காபூலைக் கைப்பற்ற முன்னேறும் "தாலிபான்" இயக்கப் படைகள்

தாலிபான் இயக்கப் படைகளுக்கு மறைமுகமாக ஆதரவும் ஆயுத உதவியும் செய்துவரும் பாகிஸ்தான், இவ்வியக்கத்தை சுயேட்சையான மத அடிப்படைவாத மாணவர் இயக்கமாகச் சித்தரிக்கிறது. ஆனால் இந்த இயக்கத்தில் மாணவர்கள் எவருமில்லை. முன்னாள் முஜாஹிதீன் போராளிகளும், பாக். ஆதரவு பெற்ற பஷ்டூன் யுத்தப் பிரபுக்களுமே உள்ளனர். பாகிஸ்தானின் நோக்கமெல்லாம் தமக்கு விசுவாசமான சன்னி பிரிவைச் சேர்ந்த பஷ்டூன் இனத்தின் அரசை ஆப்கானில் நிறுவுவதுதான். இதனை, சன்னி பிரிவைச் சேர்ந்த சவுதி அரேபியாவும் அதன் மூலம் அமெரிக்காவும் ஆதரிக்கும் என்று அது கணக்கு போடுகிறது. அண்டையிலுள்ள தாஜிக், உஸ்பெக், கிர்கிஸ்தான் ஆகிய ரஷியாவிலிருந்து பிரிந்த நாடுகளில் சன்னி பிரிவு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ளதால் அவையும் இதனை ஆதரிக்கும் என்று கருதுகிறது. ஆனால், ஆப்கானில் வாழும் ஷியா பிரிவு முஸ்லிம்களுக்கு இதனால் ஆபத்தாகிவிடும் என்று ஷியா பிரிவு முஸ்லிம் அண்டை நாடான ஈரான் கடுமையாக எதிர்க்கிறது. மறுபுறம், இந்திய அரசோ தனது அரசியல் ஆதாய நோக்கங்களுக்காக தற்போதைய ரப்பானி அரசை மறைமுகமாக ஆதரிக்கிறது.

இதர யுத்தப் பிரபுக்களுடன் தற்காலிக உடன்பாடு செய்து கொண்டு தாலிபான் இயக்கம் காபூலை நோக்கி முன்னேறிய போதிலும், அதற்கென ஒருங்கிணைந்த தலைமை இல்லை. இதனைச் சாதகமாக்கிக் கொண்டு பஷ்டூனாகிய ஹெக்மத்தியார் பலனை அறுவடை செய்யக் காத்திருக்கிறார். அதேபோல யுத்தப் பிரபுக்கிடையிலான மோதலை சாதகமாக்கிக் கொண்டு தருணம் பார்த்து தாக்குதல் நடத்த காத்திருக்கிறார் தோஸ்தம். எவ்வாறாயினும் ஆப்கானில் தொடரும் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வருவதற்கான சாத்தியக் கூறுகள் அருகாமையில் இல்லை என்பதையே நிலைமைகள் உணர்த்துகின்றன.

## சீரழிந்த வலதுகளின் சீமைச் சாராய 'புரட்சி'!

அண்மையில் தமது கட்சியின் 16-வது அகில இந்திய மாநாட்டை வலது கம்யூனிஸ்டுகள் நடத்தி முடித்ததும், அதன் இளைஞர் அமைப்பு வேலையின்மையை எதிர்த்து நாடு தழுவிய பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டுள்ளது. அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தைச் (AIYF) சேர்ந்த 'தளபதி'கள் இவ்வியக்கத்திற்காக புதுமையான முறையில் நிதிதிரட்டக் கிளம்பினார்கள். எப்படித் தெரியுமா? மேட்டுக்குடி பிரிவைச் சேர்ந்த ஒரு நபரிடம் ரூ. 1000/- நன்கொடை பெறுவது; நன்கொடை அளித்தவர்களைக் கௌரவிக்க ஐந்து நட்சத்திர விடுதியில் ஆடம்பரமாக சாராய விருந்து நடத்துவது; இதில் எஞ்சிய பணத்தை வேலையின்மை எதிர்ப்புப் 'புரட்சிப்' பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்வது என்பதுதான் இவர்களது புதுமை

www.padippakam.com

யான நிதி திரட்டும் திட்டம்.

இதன்படி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் பொதுச்செயலாளரும், வலது கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்ட தேசிய கவுன்சில் உறுப்பினருமான மாத்யூ தாமஸ் தலைமையில், நவம்பர் முதல் வாரத்தில் டெல்லியிலுள்ள ஒரு ஐந்து நட்சத்திர விடுதியில் கோலாகலமாக சீமைச் சாராயவிருந்து நடந்தது. வோட்கா, வின்டேஜ் விஸ்கி, ரம், பீர் ஆகியன வெள்ளமெனப் பாய்ந்த இந்த விருந்தில் "சிக்கன் டிக்கா", கோழிக் குஞ்சு வறுவல், ஆட்டுத் தொடைக்கறி, சூப், ஐஸ்கிரீம் ஆகியனவும் பரிமாறப்பட்டன. சீமைச் சாராயத்தை வயிறு முட்டக் குடித்துவிட்டு "வேலையின்மையை ஒழிப்போம்! புரட்சி ஓங்குக!" என்று இளைஞர் மன்றத் தளபதிகள் சூளுரைத்தார்களாம்! டெல்லி மட்டுமின்றி நாடெங்கும் 10 பெரு நகரங்களில் இது போன்ற சாராய விருந்துகளை நடத்தத் திட்டமிட்டார்களாம். இதில் வேடிக்கை என்னவென்றால், இச்சாராய விருந்தை தலைமையேற்று நடத்திய மாத்யூ தாமஸ், ஹங்கேரி நாட்டில் அந்நாட்டு 'கம்யூனிஸ்டு'க் கட்சியுடன் இணைந்து 5 ஆண்டுகள் பணியாற்றிய கொள்கை வீரராம்!

இப்போலிக் கம்யூனிஸ்டு பொறுக்கிகள் நடத்திய சீமைச் சாராயக் கூத்துகளைப் பற்றி டெல்லி பத்திரிகைகள் நாறடித்ததும், அரண்டு போன கட்சித் தலைமை, கட்சியின் கௌரவத்தை சீர் குலைத்து விட்டதாகக் கூறி மாத்யூ தாமசை கட்சியின் அடிப்படை உறுப்பினர் தகுதியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்துள்ளது. ஆனால் கட்சித் தலைவர்களின் ஆலோசனைப்படிதான் இந்த விருந்தை நடத்தினேன் என்று உண்மையைப் போட்டு உடைத்து விட்டார் தாமஸ். ஏற்கனவே கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, "கடந்த 4 ஆண்டுகளில் கட்சிக்குப் புதிய உறுப்பினர்கள் வரவில்லை; இருக்கிற உறுப்பினர்களும் விலகி ஓடிவிட்டார்கள்" என்று புலம்பிக்கொண்டிருக்கும் இப்போலிகள், மேற்கத்திய போலிக்கம்யூனிஸ்டுகளின் வழியில் விரைவில் கட்சியையே கலைத்து விடும் திசையில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல முன்னேற்றம் தான்!

## மணிப்பூரில் தொடரும் இனஉரிமைப் போர்

வடக்கே காஷ்மீரில் அடக்கு முறையை ஏவி உலக அரங்கில் அம்பலப்பட்டு நிற்கும் இந்திய அரசு, இப்போது வடகிழக்கே தனது விரிவாக்கப் பேரரசை - அடக்குமுறைக் கொள்கைகள் அம்பலமாவதைக் கண்டு விழிபிதுங்கி நிற்கிறது. குறிப்பாக, மணிப்பூர் மாநிலத்தில் கடந்த செப்டம்பர் மாதம் முதலாக இந்தியாவுக்கு எதிராக பேரணிகள், பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகள் தொடர்கின்றன.

1949 செப்டம்பர் 21-ம் நாளன்று மணிப்பூர் மாநிலம் இந்தியாவுடன் கட்டாயமாக இணைக்கப்பட்டது. மணிப்பூரின் அன்றைய மன்னர் போத் சந்திர சிங்கை இந்திய அரசு மிரட்டிப் பணிய வைத்து இந்தியாவுடன் மணிப்பூரை இணைக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைத்தது. அதைத் தொடர்ந்து அதே ஆண்டு அக்டோபர் 15-ந் தேதி முதலாக மணிப்பூர் இந்தியாவின் புதிய மாநிலமாக அறிவிக்கப்பட்டது. "இத்தகைய வலுக்கட்டாய இணைப்பு சட்ட விரோதமானது; அன்றைய மன்னரை நிர்ப்பந்தமாக கையெழுத்திட வைத்த ஒப்பந்தம்; இந்த இணைப்பை பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் இதுவரை அங்கீகரித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றவில்லை; மணிப்பூர் மக்களிடமும் ஒப்புதலோ கருத்துக் கணிப்போ நடத்தப்படவில்லை" என்று இந்தியாவின் விரிவாக்க - ஆக்கிரமிப்புக் கொள்கையை அம்பலப்படுத்தும் ஐக்கிய தேசிய விடுதலை முன்னணி (UNLF) மற்றும் மக்கள் விடுதலைப் படை (PLA) ஆகிய சுயநிர்ணய உரிமைப் போராளி அமைப்புகள் அக்.15 அன்று மாநிலந்தழுவிய கடையடைப்புப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தியுள்ளன. இது தவிர பிரபல கல்வியாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள், சட்ட வல்லுநர்களைக் கொண்டு மாநிலம் முழுவதும் கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள் நடத்தி இந்திய ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கையை அம்பலப்படுத்தி வருகின்றனர். மணிப்பூரின் மைத்தி இன மக்கள் பேருற்சாகத்துடன் இவற்றை ஆதரித்து, சுய நிர்ணய உரிமை கோரி பேரணிகளைத் தொடர்கிறார்கள்.

பீதியடைந்த மணிப்பூரின் பொம்மை முதல்வரான ரிஷாங்கெய்சிங், போராளிகளுக்கும் மத்திய அரசுக்குமிடையே சமரசப் பேச்சுவார்த்தைகளுக்குதான் ஏற்பாடு செய்வதாக நரித்தனமாக ஆசை வார்த்தை காட்டிப் பார்த்தார். ஆனால் போராளிகள் இத்தகைய மாய்மாலங்களை முற்றாக நிராகரித்து விட்டனர். ஆத்திரமடைந்த செய்சிங் அரசு, மத்திய ரிசர்வ் போலீசுப் படையை பெருமளவில் குவித்து போராளிகளை வேட்டையாடக் கிளம்பியது. ஆனால் இந்நடவடிக்கைக்கு எதிராக மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் பெருகியதும், செய்வதறியாது கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறது.

## பழங்குடியினப் பெண்கள் மீது தொடரும் பாலியல் வன்முறை

ஆண்டுதோறும் வறட்சிக்கும் பட்டினிச் சாவுகளுக்கும் இலக்காகி வரும் ஓரிசா மாநிலத்தில், பெண்கள் மீது - குறிப்பாக பழங்குடியினப் பெண்கள் மீது பெருகி வரும் பாலியல் வன்முறைகள் நாட்டையே வெட்கித் தலைகுனிய வைத்துள்ளது. இரண்டு நாட்களுக்கு மூன்று சம்பவங்கள் என்ற விகிதத்தில், இவ்வாண்டின் முதல் எட்டு மாதங்களில் மட்டும் 330 பேர் பாலியல் வன்முறைக்கு ஆளாகியுள்ளனர்.

கடந்த செப்டம்பர் 7-ம் நாளன்று ஜார்சுகுடா மாவட்டத்தில், தன்னார்வக் குழுவில் பணியாற்றும் இரு பழங்குடியினப் பெண்களை வழிமறித்து 4 பேர் கும்பலாக பாலியல் வன்முறையை ஏவினர். அதைத் தொடர்ந்து சுந்தர்கார் நகர் அருகே ஒரு பழங்குடியின பெண்ணை 7 பேர் பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். செப்-26-ந் தேதியன்று 4 பேர் கொண்ட இளைஞர் கும்பலொன்று, அங்குல் நகரில் 20 வயதான இளம் பெண்ணைக் கடத்திச் சென்று நாசப்படுத்தியுள்ளன. செப்.29 அன்று மயூர்பன்ச் மாவட்டத்திலுள்ள சுலியபாடா போலீசு நிலைய ஆய்வாளன், ஒரு பழங்குடியினப் பெண்ணை கொட்டடியில் அடைத்து பாலியல் வன்முறையை ஏவியுள்ளனார். அக்டோபர் முதல் வாரத்தில் ஒரு தலித் பெண்ணை முடியைப் பிடித்து தெருவில் இழுத்துச் சென்ற ஒரு சமூக விரோதி, அவரைத் தனது வீட்டில் அடைத்து வைத்து


படிப்பகம்

www.padippakam.com



பாலியல் பலாத்காரம் செய்துள்ளான். இச்சமூக விரோதியின் வைப்பாட்டியுடன் இந்த தலித் பெண் வாய்ச் சண்டை போட்டதற்குத்தான் இந்தத் 'தண்டனை'!

இப்படி கேள்வி முறையின்றி தலித் - பழங்குடியினப் பெண்கள் ஒரிசாவில் பாலியல் வன்முறைக்கு ஆளாகி வருகிறார்கள். கடந்த ஆண்டில் நடந்துள்ள 422 பாலியல் வன்முறைத் தாக்குதல்களில் 286 சம்பவங்களில் தலித் - பழங்குடியினப் பெண்களே இலக்காகியுள்ளார்கள். பொருளாதார, சமூக, சாதிய அடக்குமுறையின் ஓர் அங்கமாகவே பழங்குடியினப் பெண்கள் மீது பாலியல் வன்முறைகள் தொடர்கிறது. குற்றவாளிகளுக்குக் குறைவான தண்டனை, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதில் போலீசார் செய்யும் தாமதம், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய மருத்துவ சான்றிதழ் கிடைப்பதில் இழுத்தடிப்பு, வழக்குமன்ற தாமதம் முதலானவற்றால் பாலியல் குற்றங்கள் பெருகவே செய்கின்றன என்று மனித உரிமை அமைப்பினரும் சமூகவியலாளர்களும் அரசைக் குற்றம் சாட்டுகின்றனர். ஆனாலும் கடந்த ஆண்டில் நடந்த பாலியல் கொடூர சம்பவங்களில் இன்றுவரை 3 பேர் மீதுதான் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஒரிசா முதல்வரின் மனைவியான ஜெயந்தி பட்நாயக்தான் கடந்த ஆண்டுவரை தேசிய மகளிர் கமிஷனின் தலைவராக இருந்தார். அவரது சொந்த மாநிலத்தின் நிலைமையே இதுதான் என்றால், நாட்டின் ஒட்டுமொத்த நிலைமையை சொல்லத்தான் வேண்டுமா? வெட்கக்கேடு!

## இஸ்ரேல் பிரதமர் கொலை: வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது

மேற்காசியாவிலுள்ள இனவெறி பிடித்த இஸ்ரேல் நாட்டின் பிரதமரான இஷ்டாக்ராபின் யூத இன வெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார். ''பாலஸ்தீனிய பிரச்சினைக்குத் தீர்வு கண்ட தீரர்; மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்டிய அண்ணல்'' என்று ஏகாதிபத்தியங்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றன. ஆனால் மேலை நாடுகள் சித்தரிப்பது போல ராபின் சமாதான சிற்பியோ, வெண்புறாவோ அல்ல. யூத இனவெறியை ஊட்டி வளர்த்த ராபின் அதற்கே இன்று பலியாகிப் போனார். அவர் வளர்த்த இனவெறிக் கடாவே அவர் மார்பில் பாய்ந்து உயிரைக் குடித்து விட்டது.



சுட்டுக் கொல்லப்பட்ட 'சமாதான சைவப்புலி' ராபின்

இஸ்ரேலின் எதிர்க்கட்சியான லிக்குட் கட்சியைப்போலவே ஆளும் தொழிற்கட்சியும் இனவெறியை மூலதனமாகக் கொண்டே கட்டி வளர்க்கப்பட்டது. நீண்ட காலமாக பாலஸ்தீனியர் மீது இனவெறி அடக்குமுறையை ஏவி தோல்வி கண்ட நிலையில் புதிதாக ஆட்சிக்கு வந்த ராபின், இலங்கையின் அதிபர் சந்திரிகா பாணியில் சமாதான நாடகமாடக் கிளம்பினார். ஏனெனில் பாலஸ்தீனிய பிரச்சினை காரணமாக அரபு நாடுகள் இஸ்ரேலுடன் பொருளாதார - வர்த்தக உறவுகளைப் புறக்கணித்து பகைமை பாராட்டி வந்தன. ''காட்'' ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பொருளாதாரமும் வர்த்தகமும் உலக மயமாகிவிட்ட நிலையில், இனியும் இஸ்ரேல் தனது பழைய பாணி இனவெறிக் கொள்கையைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. மேலும் இஸ்ரேலுக்குத் தொடர்ந்து பொருளாதார - ராணுவ உதவிகளைச் செய்ய இயலாத நிலையில் அதன் எஜமானாகிய அமெரிக்காவின் பொருளாதாரமே நெருக்கடியில் சிக்கித் தவித்தது. எனவே அரபு நாடுகளுடன் பொருளாதார - வர்த்தக உறவுகளை வளர்த்து தனது இனவெறி துணை வல்லரசு நிலையைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கத்தோடுதான், அமெரிக்காவின் ஏற்பாட்டின்படி, பாலஸ்தீனியர்களுக்கு பெயரளவிலான சுயாட்சி வழங்கும் திட்டத்தை ராபின் மேற்கொண்டார். எதிர்பார்த்தபடியே அரபு நாடுகளும் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்களில் ஒரு பிரிவினரும் துரோகமிழைத்து இனவெறி பிடித்த இஸ்ரேலுடன் கூடி குலாவத் தொடங்கினார். அதேசமயம், ஒப்பந்தப்படி பாலஸ்தீனியருக்குப் பெயரளவிலான சுயாட்சி உரிமை கூட வழங்காமல் இஸ்ரேலிய இனவெறியர்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வந்தனர்.

இத்தனை காலமும் நாட்டையும் மக்களையும் இனவெறி அடிப்படையில் வளர்த்துவிட்ட பிறகு, இப்போது மாறிய உலக நிலைமைகளால் அமைதி - சமாதானம் என்று சைவப் புலியாக நாடகமாடினார் ராபின். இதைச் சகித்துக் கொள்ள முடியாமல் ஏற்கனவே யூத இனவெறியர்கள் சிறியதும் பெரியதுமான போராட்டங்களை நடத்தி வந்தனர். அதன் உச்சகட்டமாகவே யூத இனவெறி இளைஞர் ஒருவன் ராபினை சுட்டுக் கொன்றுள்ளான்.

ஆனால் இந்த உண்மைகளை மறைத்துவிட்டு ராபினை அமைதியின் தூதுவர், சமாதானச் சிற்பி என்றெல்லாம் ஏகாதிபத்தியவாதிகள் புகழஞ்சலி செலுத்துகின்றனர். ஏகாதிபத்தியக் கைப்பாவைகளான இந்தியப் பிற்போக்கு ஆட்சியாளர்களும் வெட்கமின்றி அரசு முறை துக்கத்தைக் கடைபிடிக்கின்றனர். போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு எல்லா ஓட்டுக் கட்சிகளும் ராபினின் சாவுக்கு ஒப்பாரி வைத்து சட்ட மன்றங்களில் அஞ்சலி செலுத்துகின்றன.

நாளை, தென்னாப்பிரிக்காவின் முன்னாள் நிறவெறி அதிபர் டி கிளாகும், இலங்கையின் சந்திரிகாவும், அயர்லாந்து போராளிகளுடன் சமாதான நாடகமாடும் இங்கிலாந்தின் இனவெறி பிரதமரான ஜான்மேஜரும் மாண்டு போனால், இந்த வெட்கங்கெட்ட ஏகாதிபத்திய கொத்தடிமைகள் அழுது புலம்பி அஞ்சலி செலுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ●



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்



## ஏகாதிபத்திய எதிர்ப்பு: பா.ஜ.க. - சிவசேனா பாணி

அமெரிக்க பன்னாட்டு நிறுவனமான என்ரான் தனது ''தபோல் மின் திட்டம்'' பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி அரசால் ரத்து செய்யப்பட்டவுடன், இப்பிரச்சினை தொடர்பாக தீர்வு காண இங்கிலாந்து நாட்டின் தலைநகர் இலண்டனில் நடுவர்களை அணுகி முறையிட்டது. ஏகாதிபத்திய எதிர்ப்புச் சவடால் அடித்துப் பின் பல்டியடித்த இந்து மத வெறியர்கள், ''இலண்டனில் நடைபெறும் இவ்வழக்கை என்ரான் திரும்பப் பெற வேண்டும்'' என்பதனை மறு பேச்சு வார்த்தைக்கு முன் நிபந்தனையாக விதித்தார்கள். பேச்சு வார்த்தையில் இது சிக்கலை உருவாக்கவே, இந்த அற்ப நிபந்தனையையும் கைகழுவி விட்டது அக்கும்பல்.

## இடதுசாரி முன்னணி மந்திரியின் பிதற்றல்

சமீபத்தில் கல்கத்தா நகரில் நடந்த ஜெர்மன் திரைப்பட விழாவொன்றில், மேற்கு வங்க மாநிலத்தின் பாராளுமன்ற விவகார மந்திரி பிரபோத் சந்திர சங்கா, இட்லரை வானளாவப் புகழ்ந்து தள்ளியிருக்கிறார். இட்லரும் அவனது நாஜி அரசாங்கமும் பிரிட்டனை எதிர்த்த இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு உறுதியாக ஆதரவளித்ததாகவும், இதற்காக நேதாஜிக்குப் பல உதவிகளைச் செய்திருப்பதாகவும் வரலாற்றைத் திரித்துப் புரட்டியிருப்பதோடு, பாசிச ஜெர்மன் நாஜிகளை ''சைவப் புலிகளாக''ச் சித்தரித்து உளறிக் கொட்டினார். அம்(மட) மந்திரி!

## கருணையின் மறுபக்கம்

ஏற்கனவே 'அன்னை' தெரசாவை அம்பலப்படுத்தி, ''நரகத்தின் தேவதை'' எனும் செய்திப் படத்தைத் தயாரித்து வெளியிட்டவர் கிறிஸ்டோபர் ஹிட்சென்ஸ். தற்பொழுது இவர் ''தெரசா, ஹெய்தியின் சர்வாதிகாரியாய்த் திகழ்ந்த டுவாலியர் போன்ற கொடுங்கோலர்களிடமிருந்தும், அமெரிக்காவின் மோசடிப் பேர்வழி சார்லஸ் கியாட்டிங் போன்றவர்களிடமிருந்தும் கோடி கோடியாய்ப் பணம் பெற்று வருகிறார்'' என்பதைத் தக்க ஆதாரங்களுடன் ''வாஷிங்டன் போஸ்ட்'' எனும் தினசரியில் அம்பலப்படுத்தியுள்ளார்.

''என்ரான்'' தலைவர் கென்னத்லே, ரெபக்கா மார்க் ஆகியோருடன் பால் தாக்கரே.



## நஷ்ட ஈடு பரிகாரமா?

கடந்த வருடம் அக்டோபரில் இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த இராக்கம்மாள் மற்றும் முருகலெட்சுமி என்ற இரு பெண்களைச் சட்ட விரோதமான முறையில் பிடித்துச் சென்ற அப்பகுதி போலீசு, அப்பெண்களைச் சித்திரவதை செய்ததோடு, மானபங்கப்படுத்தியுமுள்ளது. இது பற்றி விசாரணை நடத்திய சௌந்தரபாண்டியன் கமிட்டி, போலீசார் அத்து மீறி நடந்திருப்பது உண்மைதானென்றும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 1 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளது. ஆரம்பத்தில் இச் சம்பவத்தை மூடி மறைக்க முயன்ற ஜெயா அரசு, தற்பொழுது நஷ்ட ஈட்டை உடனே வழங்கி விட்டதாக அறிக்கை விடுத்துத் தன்னை நியாயவனாகக் காட்டிக் கொள்ள முயலுகிறது.

## இறால் பண்ணைகளால் நாசமானது நெற்பயிர்

சமீபத்தில் பெய்த புயல் - அடை மழையின் காரணமாக நாகை காயிதே மில்லத் மாவட்டத்தைச் சேர்ந்த திருத்துறைப் பூண்டி, முத்துப் பேட்டை, பகுதிகளில் 50,000 ஏக்கர் பரப்பில் விளைந்து நின்ற நெற்பயிர்கள் நீரில் மூழ்கிப் போயின. இப்பகுதிகளில் புற்றீசல் போல் முளைத்துக் கிளம்பியிருக்கும் இறால் பண்ணைகளின் காரணமாகவே மழை நீர் வடிந்து செல்ல வழியின்றி பயிர்கள் நீரில் மூழ்கின. இங்கிருக்கும் பண்ணைகளில் பெரும்பாலானவை சசிகலா குடும்பத்தாருக்குச் சொந்தமானவையாதலால், விவசாயிகளின் எதிர்ப்பையும் மீறி பண்ணைகளை அமைக்க அரசு அனுமதி கொடுத்துள்ளது. பாதிப்புகளைப் பார்வையிட வந்த கலெக்டரிடம் இதனைச் சுட்டிக் காட்டி, கேள்வி எழுப்பியுள்ளனர் அப்பகுதி விவசாயிகள். திணறிப் போன கலெக்டரோ கேள்வி எழுப்பியவர்களை முறைத்த படியே வந்த வழி திரும்பிப் போனார்.

## ஆபாச எதிர்ப்பில் சிவசேனாவின் உண்மை முகம்

ஓரிரு மாதங்களுக்கு முன்பு விளம்பரக் கலைஞர்களான மதுசாப்ரே - மிலிந்த் சோமன் என்ற இருவர் மீதும் விளம்பரமொன்றில் முழு நிர்வாணமாகக் காட்சியளித்ததற்காக அரசு சார்பில் வழக்குத் தொடர்ந்தவர் மகாராஷ்டிரா மாநிலக் கலாச்சார மந்திரி பிரமோத் நாவல்கர். இவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் மராட்டிய இதழ் ''பிரமந்தி''யின் தீபாவளி மலரில், அதே இருவரின் முழு நிர்வாணப் புகைப்படம் கொண்ட விளம்பரமொன்று வெளியாகியுள்ளது. மேலும் அத்தீபாவளி மலரில் 14 பக்கங்களில் பெண்களின் அரை நிர்வாணப் படங்களும், 9 பக்கங்களில் ஆண் - பெண் இணைந்திருக்கும் படங்களும், ''ரங்கீலா'' உள்ளிட்ட ஆபாச இந்தி மற்றும் மேலை நாட்டுத் திரைப்படங்களின் விளம்பரங்களும் வெளியாகியுள்ளன. இப்புகைப்படங்களைத் தனிப்பட்ட முறையில் அவ்விதழின் ஆசிரியரான இம்மந்திரியே தேர்ந்தெடுத்துள்ளாராம். வெட்கக்கேடு!



படிப்பகம்

www.padippakam.com

# கம்யூனிசம் தோற்றதாம்! முதலாளித்துவம் வென்றதா?

சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் ''சோசலிச'' அமைப்பின் வீழ்ச்சி, அரசின் ஏகபோகக் கட்டுப்பாடு மற்றும் நெறிப்படுத்துதல் அடிப்படையிலான பொருளாதாரமுறையின் தோல்விதான் என்றும், சுதந்திரமான போட்டி அடிப்படையிலான சந்தைப் பொருளாதாரத்தின் வெற்றிதான் என்றும் மேலை மற்றும் கீழை நாடுகளின் முதலாளித்துவப் பொருளாதார வல்லுநர்கள் அத்தனை பேரும் எக்காளமிடுகின்றனர். சந்தைப் பொருளாதார முறை என்று அவர்கள் குறிப்பிடுவது முதலாளித்துவப் பொருளாதார முறையைத் தான் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த முதலாளித்துவம் வெகுதூரம் வளர்ந்து விட்ட நிலையில் சுதந்திரமான போட்டி அடிப்படையிலான சந்தைப் பொருளாதாரம் என்பதே பித்தலாட்டமான வரையறுப்புதான்; உண்மையில் உலகமெங்கும் ஆதிக்கம் வகிப்பது ஏகபோகப் பொருளாதாரம் தான்; குறிப்பாக அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டிலேயே அனைத்துத் தொழில்களும் பூதாகரமாக வளர்ந்து விட்ட முன்னாள் சோசலிச நாடுகளில் ஏகபோகமல்லாத முதலாளித்துவம் என்பது சாத்தியமே இல்லை; இதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்.

சந்தைப் பொருளாதார முறை என்பது தனியுடைமை அதாவது தனியார் மூலதனம் - முதலீடு அடிப்படையிலானது. ஆனால் ''நேற்றுவரை'' தொழில்களும் நிலமும் அரசு ஏகபோக உடமையாக இருந்த பொருளாதார அமைப்பில் திடீரென்று தனிவுடமையும் தனியார் மூலதன முதலீடும் எப்படி வந்தது? வரலாற்றில் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு உருக்கொண்டபோது நிகழ்ந்த ''மூலதனத்தின் ஆதிமுதல் திரட்சி'' பற்றிய உண்மையை முதலாளித்துவப் பொருளாதார வல்லுநர்கள் மூடி மறைக்க முயன்றதைப் போலவே முன்னாள் சோசலிச நாடுகளில் தனிவுடமையும் தனியார் முதலீட்டிற்கான ''மூலதனத் திரட்சியும்'' எப்படி, எப்போது நிகழ்ந்தது என்பதைப் பற்றி வாய் திறவாமல் இருக்கின்றனர். ''கம்யூனிசம் தோற்றுவிட்டது! முதலாளித்துவம் வென்றுவிட்டது!'' என்று அவர்கள் எக்காளமிடுவது உண்மையல்ல என்பதை இந்தக் கேள்விக்கான பதில் நிரூபிக்கிறது. அதற்கு மாறாக, கம்யூனிசம் ஒரு பின்னடைவைச் சந்தித்திருக்கும் அதேசமயம் - அந்தப் பின்னடைவும் இப்போது வந்ததல்ல; அறுபதுகளின் ஆரம்பத்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆட்சியைப் பிடித்தபோது நிகழ்ந்ததுதான் - முதலாளித்துவ ஏகாதிபத்தியம் மேலும் சிக்கலான ஒரு நெருக்கடிக்குள் புகுந்துள்ளதுதான் உண்மையாகும்.

முன்னாள் சோவியத் ஒன்றியத்திலும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் குருச்சேவ், பின்னர் பிரஷ்னேவ் கும்பலைச் சேர்ந்தவர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதும், போலிக் கம்யூனிஸ்டு தலைவர்கள் - பிரமுகர்களும், கட்சிக்கு வெளியிலிருந்த நிர்வாக - தொழில்நுட்ப வல்லுநர்களும் அரசுச் சொத்துக்களாகிய நிலத்தின் மீதும் தொழில் - வர்த்தகத்தின் மீதும் ஆதிக்கத்தை நிலைநாட்டினர்; ஊழல்கள் அதிகார முறைகேடுகள் மூலம் கோடி கோடியாகக் கொள்ளையடித்து அதிகார வர்க்க முதலாளிகளாயினர். இப்படி ஒரு புதிய முதலாளி வர்க்கம் அங்கெல்லாம் செழித்து வளர்கிறது என்பதை உலகம் முழுவதுமுள்ள மார்க்சிய - லெனினிய - மாவோயிச புரட்சியாளர்கள் அம்பலப்படுத்தினர். இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகள் போன்றவர்கள் மட்டுமல்ல, ஏகாதிபத்தியவாதிகளும் கூட அது தவறான கணிப்பு என்றும் அந்நாடுகள் தொடர்ந்து சோசலிச நாடுகளாகவே நீடிக்கின்றன என்றும் வாதிட்டனர்.

வாலண்டின் பாவ்லோவ்



எண்பதுகளின் இறுதியில் வந்த கோர்பச்சேவ் கும்பல், மறுசீரமைப்பு என்கிற பெயரில் அதிகார வர்க்க முதலாளிகளையே மேற்கத்திய பாணியிலான அப்பட்டமான, சட்டபூர்வ முதலாளிகளாக மாற்றும் வேலையில் இறங்கியது. அதையே படிப்படியான மாற்றமாகச் செய்வதற்கு பொருளாதார அமைப்பில் சில புதிய நடவடிக்கைகளை எடுத்தது. உற்பத்தி மற்றும் விற்பனை மீதான எல்லாக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு, அனைவருக்கும் கல்வி, வேலை வாய்ப்பு, உணவு, உடை, இருப்பிட வசதி தருவது என்கிற அரசின் பொறுப்பு எல்லாம் முற்றாக கைவிடப்பட்டு திறந்த சந்தைக்கு விடப்பட்டது. நுகர்வோரின் தேவைக்கேற்ப இறக்குமதி செய்தோ, உற்பத்தி செய்தோ விற்பதற்கான உரிமை தனியாருக்கு வழங்கப்பட்டது. நலிவடைந்த தொழில்கள் எனக் கணிக்கப்பட்டவைகளில் இருந்து தொழிலாளர்கள் தூக்கியெறியப்பட்டனர்; இலாபவிகிதத்தையும் உற்பத்தித் திறனையும் கூட்டுவது என்ற பெயரில் மேலும் பல தொழில்களில் ஆட்குறைப்பு நடந்தது; அரசுடைமையாக இருந்த தொழில்கள் பங்குகளாகப் பிரித்து விற்கப்பட்டன. சோசலிச முகமூடி தரித்திருந்த கோர்பி கும்பல் ஒவ்வொரு ருஷ்யக் குடிமகனுக்கும் பத்தாயிரம் ரூபாய்கள் மதிப்புடைய பங்குகள் வீதம் 6000 முதல் 7000 நடுத்தர, பெரிய தொழில்களுக்கான பங்குகள் விநியோகித்தது. இந்தத் தொழில்களை நடத்துவதில் பங்குதாரர்கள் உரிமை பெறவும், தனித்தனி இலாபமீட்டவும் இதனால் வாய்ப்பிருப்பதாக நாடகமாடியது. பங்கு முதலீடு என்பதே ஏகபோக முதலாளித்துவம் மூலதனம் திரட்டி மேலும் கொள்ளையிடுவதற்கான வழிமுறைதான் என்பதை நாம் அறிவோம். ஆனால் இதிலும் அங்கு நடந்தது என்ன?

திடீரென்று பல ஆயிரம் மடங்கு பண வீக்கத்தால் விலைவாசி வீங்கிப் போனதில் வேறு பிற நுகர்பொருட்களை மட்டுமல்ல; உணவு, உடைக்கான தேவைகளை வாங்கவும் முடியாமல் பெரும்பாலான மக்கள் வறுமையிலும் பட்டினியிலும் தள்ளப்பட்டனர். பலர் பிச்சையெடுக்கவும், குளிரில் விறைத்துப் போகவும், வீடு வாசல் இல்லாமல் தெருவில் தவிக்கவும், பெண்களில் பலர் விபச்சாரத்தில் ஈடுபடவும், திடகாத்திரமான இளைஞர்கள் தனியார் குண்டர்படையிலோ, கிரிமினல் மஃபியாகும்பலிலோ சேரவும் செய்தனர். இந்த நிலையில் பங்குப் பத்திரங்களை வைத்துக் கொண்டு நாக்குத் தான் வழிக்க முடியும்!



படிப்பகம்

www.padippakam.com

அதேசமயம், ஒரு சிறுபிரிவினர் மட்டும் மிகவும் ஆடம்பரமான, அருவெறுக்கத்தக்க - வக்கிரமான, பகட்டான, உல்லாச - ஊதாரி வாழ்க்கையில் வெளிப்படையாகவே மூழ்கித் திளைத்தனர். நடுத்தர, மேல்தட்டு நடுத்தர கும்பல்களின் கனவாகிய குளுகுளு இயந்திரங்கள், சலவை இயந்திரங்கள், வீடியோ வசதி கொண்ட வானொளிகள், உள்நாட்டுக்கார்கள், வசதியான தனித்தனி அடுக்குமாடித் தளங்கள் போன்றவை அல்ல. மெர்சிடஸ், கெடிலாக், பி.எம். டபிள்யூ போன்ற இறக்குமதி செய்யப்பட்ட கார்கள்; அவற்றுக்கு முன்னும் பின்னும், பாதுகாப்புக்கு இயந்திரத் துப்பாக்கிகள் ஏந்திய தனியார் படைகள் - மெய்க்காப்பாளர்கள்; இத்தாலியின் மிலன் அல்லது பாரீஸ் மாநகரில் இருந்து இறக்குமதியான அர்மாணி மற்றும் வெர்சேஸ் வகை ஆடம்பர சீமான்களின் உடைகள்; சீமாட்டிகள் அணியும் வைர நகைகள், ஆடம்பர பங்களாக்கள்; ஐந்து நட்சத்திர விடுதிகள் - சூதாட்ட மாளிகைகளில் நிரந்தர ஆடம்பர அறைகள்; ஓய்வு நாட்களைக் கழிக்க பிரான்சு, இத்தாலி, இங்கிலாந்து, ஸ்பெயின் தீவுகளில் உல்லாச மாளிகைகள்; தமது வாரிசுகள் தங்கிப் படிக்க ஜெர்மனியில் பான், இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு, அமெரிக்காவில் கலிபோர்னியா, பிரான்சில் பாரிசு பல்கலைக் கழகங்களுக்கு அருகே சொந்த மாளிகைகள்; சொந்தமாக விமானங்கள் என்று ஒரு சில குடும்பங்கள் வாங்கிக் குவித்தன. திருமணம், பிறந்தநாள், தொழில் - வர்த்தக நிறுவன ஆண்டு விழாக்கள் என்று ஆடம்பர களிவெறியாட்டங்கள் நடத்துகின்றனர்; அவற்றில் மிக உயர்ந்த இறக்குமதி மதுக்களும், பல சுவை உணவுகளும், ஆபாச - வக்கிர நடனங்களும் தவறாது இடம் பெறுகின்றன.

முன்னாள் சோசலிச நாடுகளின் புதிய பணக்காரர்களான இவர்களைக் கழிசடை செல்வந்தர்கள் என்று ஏகாதிபத்திய ஏடுகளே சித்தரிக்கின்றன. இவர்கள் தான் அந்நாடுகளில் முக்கியத் தொழில்கள், வர்த்தக வியாபாரங்கள், பண்ணைகளை இப்போது உடமையாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பலர் அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகளுக்கு இணையான செல்வந்தர்களாக உள்ளார்கள். யார் இவர்கள்? திடீரென்று இவர்களிடம் மட்டும் எப்படி இவ்வளவு செல்வம் குவிந்தது? இவர்கள் ருசியா முதலிய நாடுகளின் ராக்ஃபெல்லர்கள், ஃபோர்டுகள், கார்னேஜிகள், மார்கான்கள் என்றழைக்கப்படுகிறார்கள்.

இவர்களில் 61 சதவீதத்தினர் குருச்சேவ், பிரஷ்னேவ், கோர்பச்சேவ் ஆட்சிக்காலத்தில் இரகசியமான கிரிமினல் முறைகளில் அரசுடமை தொழில்கள், வர்த்தக - வியாபாரங்கள், பண்ணைகளிலேயே ஏராளமாகக் கொள்ளையிட்டு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பதுக்கி வைத்த போலிக் கம்யூனிஸ்டு தலைவர்கள் - பிரமுகர்களும், நிர்வாக - தொழில் நுட்ப வல்லுநர்களுமாவர். தாராளமயமாக்குதல், தனியார்மயமாக்குதலைப் பயன்படுத்திக் கொண்டு, முன்பு சோசலிச தொழில், வர்த்தக, பண்ணை நிறுவனங்களாக இருந்து பின்னர் அதிகார வர்க்க முதலாளித்துவ நிறுவனங்களாக மாறியவற்றை அப்படியே தமது சொந்த உடமைகளாகக் கைப்பற்றிக் கொண்டார்கள். இவர்களோடு புதிதாக மேலை ஏகாதிபத்தியத்தின் பினாமி, தரகு முதலாளிகள், பங்காளிகளாக வளர்பவர்களும் தான் இந்த கழிசடை செல்வந்த வர்க்கமாகியுள்ளனர்.

**விளாதிமிர் குசிங்கி** என்பவன் இன்று ருசியாவிலேயே மிகப்பெரிய தான "மோஸ்ட் வங்கி"யின் முதலாளி. இவன், இப்போதைய மாஸ்கோ நகர மேயரும், பெரிய அதிகாரத் தரகனும், அடுத்த ஆண்டு அதிபர் தேர்தலில் யேல்ட்சினை எதிர்த்துப் போட்டியிட உள்ள வேட்பாளனுமாகிய யூரி லுஸகோவின் நெருங்கிய பங்காளியாகும். நாடக இயக்குநராக இருந்த இவன் ஆறாண்டுகளுக்கு முன்பு ஒரு தொழில் ஆலோசனைக் கூட்டுறவு அமைப்பை நிறுவினான்; 1991 இல் "மோஸ்ட் வங்கி"யை மாஸ்கோ மாநகராட்சி மற்றும் கட்சி நிதியைக் கொண்டு தொடங்கினான். பண வீக்கம் பூதாகரமாக வெடித்ததைப் பயன்படுத்திக் கொண்டு குறுகிய காலத்தில் கொள்ளை லாபமடித்தான். மாஸ்கோ நகர மேயருடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள கூட்டைப் பயன்படுத்திக் கொண்டு வீடு, வீட்டுமனை தொழிலில் ஈடுபட்டு அரசு நிலங்கள் - சொத்துக்களை சூறையாடி மேலும் கொழுத்தான். முன்னாள் கே.ஜி.பி. உளவுப்படை அதிகாரிகளின் தலைமையில் தனிப்படை வைத்திருப்பதோடு, இரகசிய கிரிமினல் மஃபியா உலகுடன் நெருங்கிய உறவும் வைத்துள்ளான்.



திமித்ரி யாகூபோவ்ஸ்கி;
புதுப்பணக்காரன்.

கோர்பி ஆட்சியின் இறுதிக்காலப் பிரதமராக இருந்தவன், வாலண்டின் பாவ்லோவ்; இவன் 1991 ஆகஸ்டில் நடந்து தோல்வியுற்ற அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்ட சதிகாரன் என்பதால் ஒன்றரை ஆண்டு சிறையிலடைக்கப்பட்டான். சதிவழக்குக் கைவிடப்பட்டு விடுதலையாகி மூன்றாண்டுகளுக்குள், இப்போது வங்கி, வர்த்தகம், விவசாயப் பண்ணை, ஆலோசனை முதலிய ஐந்து நிறுவனங்களுக்குச் சொந்தமானவன். பாவ்லோவைப் பொருத்தவரை சோசலிசத்தில் இருந்து முதலாளித்துவத்துக்கு மாறிக் கொள்வதில் பிரச்சனையே கிடையாது. "தேவையானது எல்லாம் போதிய அறிவும் தகுந்த மேலிடத் தொடர்புகளும் தான்" என்கிறான். புதிய வர்த்தக உறவுகளை எப்படி ஏற்படுத்திக் கொள்வது என்று ஆலோசனை வழங்குவதுதான் அவனது பிரதான தொழில். சோவியத் ஒன்றியம் பிளவுபட்டு, சிதைந்து போனபிறகு தனித்தனியாகிப் போன குடியரசுகள் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தொழிலகங்களுக்கிடையிலான தொழில் வர்த்தக உறவு அறுபட்டுப் போனது. மூலப்பொருட்களைப் பெறவும், உற்பத்திப் பொருட்களை விநியோகிக்கவும் வழியில்லாமல் போனது. இவற்றுக்கிடையிலான புது உறவு, ஒப்பந்தங்கள் போடுவதில், வாங்கவும் விற்கவுமான சந்தையில் முன்னாள் போலிக் கம்யூனிஸ்டு தலைவர்கள், பிரமுகர்கள், தொழில் வர்த்தக வல்லுநர்கள் இடைத்தரகர்களாக மாறினர். "அவற்றுக்கிடையிலான உறவு, ஒப்பந்தத்தை, உதாரணமாக உக்ரைனிடம் இருந்து எதையும் வாங்குவது அல்லது விற்பதை துருக்மேனிஸ்தானுக்கோ, கஜகஸ்தானுக்கோ மாற்றுவது எனக்கு ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை" என்கிறான் பாவ்லோவ். இதேபோலத்தான் முன்னாள் சோசலிச நாடுகள் இந்தியா போன்ற நாடுகளுடன் கொண்டிருந்த தொழில் - வர்த்தக ஒப்பந்தங்கள், இப்போது அந்நாடுகள் மேலை ஏகாதிபத்தியங்களுடன் போடும் ஒப்பந்த உறவுகளிலும் இவர்கள் இடைத்தரகு வேலை செய்து கொள்ளையடிக்கின்றனர்.

மேலிடத் தொடர்பு ஒவ்வொரு புதுத் தொழிலதிபருக்கும் வசதியான கருவியாக இருக்கிறது. அதாவது அரசு நிதியைப் பயன்படுத்தித் தொழில் நடத்த முடிகிறது. "என்னுடைய சகபாடிகள் பலரும் இதைச் செய்கின்றனர். "ஏழைகளுக்கு வீட்டு வசதிக்கென ஒதுக்கப்படும்

தொகையில் பலகோடி ரூபிள்களைப் பெற்று அடுக்குமாடி வீடுகட்டும் திட்டத்தில் முதலீடு செய்தால் 100 முதல் 120 சதவீதம் வரை ஆண்டு லாபம் ஈட்டலாம்; அதற்குத் தேவை அரசு - மேலிடத் தொடர்பு மட்டும்தான்'' என்கிறார், பாவ்லோவ். இன்னொரு விதம் அரசுப் பொருட்களை விற்பதும், அரசுக்கே வழங்குவதும். அதாவது அரசுத் தலைவர்கள், அதிகாரிகளே பினாமி பெயரிலோ, கூட்டுத்துறை பெயரிலோ அரசுடன் ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டு கழிவுப் பொருட்கள், துணைப் பொருட்கள் என்கிற முத்திரை குத்தி அதாவது தார், மண்ணெண்ணெய் என்று சொல்லி உயர் ரகப் பொருட்களான பெட்ரோல், டீசல், மசகு எண்ணெய் கடத்துவது; வீணான மரத்துண்டுகள் என்று சொல்லி நல்ல உயர்ரக மரங்கள் போன்றவை வெளிநாடுகளுக்குக் கடத்தி கள்ளச் சந்தையில் விற்று கொள்ளையடிக்கின்றனர். ''வேறெப்படி அமெரிக்கா போன்ற நாடுகளில் ருசியப் பணம் குவிகிறது? ரொக்கமாகவா எடுத்துச் செல்ல முடியும் அல்லது அரசு வங்கிதான் அனுமதி தருமா?'' என்று கேட்கிறான் பாவ்லோவ்.

இன்னொரு வகைக்கு எடுத்துக்காட்டான புது முதலாளி ஒலக் போய்கோ. ருசிய ஜனநாயக் கட்சியின் துணைத் தலைவன். வர்த்தகம், வங்கி, வீடு - வீட்டுமனை, கணிப்பொறி, மின்னணுக் கருவிகள் போன்ற தொழில்கள் செய்யும் 10 கம்பெனிகளுக்கு அதிபர். எப்பவும் இறக்குமதி ஆடையான ''அர்மாணி'', ரோல்ஸ்ராய்ஸ்'' கார் என்று பகட்டாக வாழ்கிறான். ''யாருமே தானே, நேர்வழியில் வளர்ந்தவர்கள் கிடையாது. நானும் சட்டத்தின் சந்து பொந்துகளைக் கொண்டு, இருண்ட உலக வழிகளில்தான் முன்னேறியவன்'' என்கிறான் போய்கோ. பலவகைக் கடத்தல் பொருட்களை இறக்குமதி செய்து அரசு அதிகாரிகளுக்கு விற்றே முதலீடு திரட்டியவன். இப்படியே வளர்ந்து பெரிய தொழிலதிபர் ஆனதோடு இப்போது அரசியலிலும் முக்கியப் புள்ளியாக விளங்குகிறான்.

இந்த வகையில் இன்னொருவன் சேர்கெய் மாவ்ரோடி. வரிமோசடிக்காக கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டவன். அதாவது நம்ம ஊர் அர்சத் மேத்தா போன்றவன். ஒரே மாதத்தில் வெளியே வந்து நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்டு வெற்றியும் பெற்றுவிட்டான். பலகோடி ரூபிளுக்கு அதிபதியான இவனது எம்.எம்.எம். என்ற பங்குச் சந்தைக் கம்பெனி திடீரென்று திவாலாகி, பங்குத்தொகைகள் திருப்பித் தர முடியாமற் போனான். அதாவது பலகோடி பங்குகளை விற்றுவிட்டு திடீரென்று திவாலென்று அறிவித்து மோசடி செய்தான். இவன் இப்போது நாடாளு



ரஷ்யப் புது முதலாளி
ஒலக் போய்கோ.

மன்ற உறுப்பினர் என்ற தகுதியை வைத்து நடவடிக்கை ஏதுமின்றித் தப்பித்துக் கொண்டான். ''இது எனக்குச் சாதாரணம்தான்; சோவியத் காலத்திலேயே வீடியோக்கள்'' பிடித்து இரகசியமாக சம்பாதித்தேன்; என்பதுகளிலேயே கம்ப்யூட்டர் தொழிலுக்காக ஒரு அரசு நிறுவனத் தொகையைக் கையாடல் செய்ய போலிக் கையெழுத்துப் போட்டு சிறையிலடைக்கப்பட்டேன்; ஆனால் அந்நிறுவன காசாளர் மீது பழிபோட்டுத் தப்பித்துக் கொண்டேன்'' என்று இப்போது பெருமையுடன் பத்திரிகைக்குப் பேட்டி கொடுக்கிறான். மாவ்ரோடி.

மேலும் ஒரு வகைப் புதுப் பணக்காரன், திமித்ரி யாகூபோவ்ஸ்கி. இவனுடைய தனிச் சிறப்பான தொழில், சோவியத் ஒன்றியத்தின் இறுதி நாட்களில் ஆட்சி புரிந்த போலிக் கம்யூனிஸ்டு தலைவர்கள், இராணுவத் தளபதிகள் மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பந்தங்கள் பேரங்கள் நடத்துவதற்கான சட்டத்தின் சந்து பொந்துகளைக் காட்டி லஞ்ச ஊழல் புரிவதற்கான ஆலோசனைகள் தருவது. எடுத்துக்காட்டாக, முன்னாள் கிழக்கு ஜெர்மனியில் இருந்து சோவியத் இராணுவம் வெளியேறும்போது கைவிடப்பட்ட ஆயுதத் தளவாடங்களைப் பேரம்பேசி மேற்கு ஜெர்மனியின் இராணுவ ஆயுத உற்பத்தி முதலாளிகளிடம் விற்பதில் ருசியத் தளபதிகள், தலைவர்களுக்குத் தரகனாக செயல்பட்டான். இதனால் பலகோடி ரூபிள்கள் தரகுத் தொகையாகப் பெற்றான். அவ்வளவையும் கொண்டு போய் கனடாவில் முதலீடு செய்து, சொத்துக்கள் வாங்கி மனைவி - குழந்தைகளைக் குடியமர்த்தினான். கோர்பி காலக் குழப்பங்கள் காரணமாக வெளிநாடுகளில் சுற்றினான். கனடாவில் இருந்தபோது ருசியக் கம்யூனிஸ்டு கட்சி நிதியைக் களவாடியதாக போலீசு தேடியது; அதற்குள் யேல்ட்சின் ஆட்சி உறுதிப்பட்டதைத் தொடர்ந்து ருசியா திரும்பினான். யேல்ட்சின் கும்பலுடைய அரசியல் எதிரிகளின் மீதான லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் பற்றிய ஆதாரங்களைத் திரட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டான். இப்போது குசிங்கி உட்பட பலபெரும் ஏகபோக முதலாளிகளின் சட்ட ஆலோசகராக இருக்கிறான். அதாவது பகல் கொள்ளையர்களின் மூளையாக இருக்கிறான். இதன் மூலமாகவே இவனும் பெரு முதலாளியாகிவிட்டான்.

இவர்கள்தான் ருசியா மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ''கம்யூனிசத்தை வீழ்த்தி முதலாளித்துவத்தை நிலைநாட்டியுள்ள'' ஆளும் வர்க்கத்தின் வகை மாதிரிகள். ''இவர்கள் கொள்ளையடித்த பணத்தையும் தமது தாய்நாடுகளின் முன்னேற்றத்துக்கு முதலீடு செய்கிறார்களா? இல்லை வெளிநாடுகளுக்குக் கடத்திக் குவிக்கின்றனரா? என்பதுதான் முக்கியம். ''முதலில் வெளிநாடுகளில்தான் குவித்தனர். இப்போது பங்குச் சந்தை முதலீடாகத் திரும்புகிறது'' என்று கூறுகிறது ஒரு அமெரிக்க ஏடு. ''முக்கியமானது என்னவென்றால் பணம் யாருடைய கரங்களிலாவது இருக்கிறது. ஒழுக்கம், தார்மீகம் என்று நீங்கள் கேள்விகள் எழுப்பலாம். ஆனால் பொருளாதாரத்தைப் பொருத்தவரை அது ஒரு பொருட்டே இல்லை'' என்கிறது ஒரு ருசிய ''தாராளவாத'' ஏடு.

முன்னாள் லெனின்கிரேடு நகரில் உள்ள ருசிய அறிவியல் கழகத்தின் சமூகவியல் நிறுவன ஆய்வாளர் வியாசேஸ்லேவ் அஃப்சனயேவ் என்பவர் 1989-92-ஆம் ஆண்டுகளில் நடந்த பெருமளவிலான லஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் மற்றும் நாணயச் சட்ட விதி மீறல் போன்றவை மூலம் கொள்ளையடிப்பது என்கிற பொருளாதாரக் குற்றங்களை எல்லாம் தொகுத்திருக்கிறார். மாஸ்கோவிலுள்ள அறிவியல் கழகத்தின் சர்வதேச அரசியல் பொருளாதார ஆய்வு நிறுவன இயக்குநர் ஸ்வெட்லானா. பி. கிளிங்கினா என்பவர் ''தனியார் மயமாக்கலை எப்படி அமைப்பு ரீதியில் திரண்ட குற்றவாளிகள் கைப்பற்றி கடத்திக் கொண்டு போய்விட்டார்கள்'' என்று ஆய்வறிக்கை தயாரித்துள்ளார்.

''1993 மத்தியில் உள்துறை அமைச்சகம் செய்த கணிப்பின்படி 40,000 தொழில் நிறுவனங்கள் அமைப்பாக


படிப்பகம்

www.padippakam.com

திரண்டுள்ள கிரிமினல் கும்பல்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. 70 முதல் 80 சதவீதமான தனியார் மற்றும் தனியார் நிறுவனங்கள் வங்கிகள், கிரிமினல் கும்பல்கள், லஞ்ச ஊழல் அதிகாரிகள், முறைகேடாகக் கொள்ளையடிப்பவர்களுக்கு படியளக்கின்றன. தனியார்மயமாக்கல் என்ற பெயர் இன்னமும் நீடித்தாலும் அந்நிறுவனங்களின் இயக்குநர்கள் கம்பெனி பங்குகளைச் சுருட்டிக் கொண்டுள்ளனர்" என்கின்றனர் அந்த ஆய்வாளர்கள்.

"ஊழல் அதிகாரிகளின் ஒரு வலைப் பின்னல் எண்ணெய், உலோகங்கள், மரம் மற்றும் பிற பொருட்களை வெளிநாடுகளுக்குக் கடத்துவதால் ஆண்டு தோறும் பெரும் இலாபம் சம்பாதிக்கிறார்கள்" என்கிறார் யேல்ட்சின் அரசுக்கான சுவீடன் பொருளாதார நிபுணர் ஆண்டர்ஸ் அஸ்லுண்ட். "ருசியாவின் மூன்றிலொரு பங்கு உலோக ஏற்றுமதியும் ஐந்திலொரு பகுதி எண்ணெய் ஏற்றுமதியும் சட்டவிரோத, இரகசிய வழிகளிலேயே கடத்தப்படுகின்றன" என்று மேலும் அவர் சொல்கிறார்.

மேற்கண்டவாறெல்லாம் புத்துருவாக்கம் பெற்று ஆளும் வர்க்கமாக மாறும் அதே நபர்களில் பலரும் அரசியலிலும் நேரடியாக ஈடுபட்டு இப்போது தேர்தல்கள் மூலம் மீண்டும் பதவிக்கு வருகிறார்கள். இதைத்தான் "மீண்டும் கம்யூனிஸ்டுகள், சோசலிஸ்டுகள் ஆட்சியைப் பிடிக்கிறார்கள்" என்று சி.பி.ஐ., சி.பி.எம். மட்டுமல்ல, சச்சிதானந்தம் போன்ற இந்தியப் "புதிய போலிகளும்" கூட வரவேற்கின்றனர்.

எந்த நபர்களை ஸ்டாலினிஸ்டுகள், ஜனநாயகம் - சுதந்திரத்தின் எதிரிகள் என்றும், அவர்களுடைய ஆட்சி வீழ்த்தப்பட்டது என்றும் மேலை ஏகாதிபத்தியங்கள் எக்காளமிட்டனவோ அதே நபர்கள்தான் அவை விரும்பும் சுதந்திர போட்டி சந்தைப் பொருளாதாரத்தில் தமது பங்காளிகளாக வந்து நிற்கக் காண்கின்றன. இதைப்பற்றி அவை என்ன சொல்கின்றன? "மாஸ்கோவின் பகற்கொள்ளையர்களது கழிசடைத் தனங்கள் மாறும்; உண்மைதான்! புதுப்பணம் - பகட்டுடைய நிறைய கேளிக்குரிய, அருவெறுக்கத்தக்க பாத்திரங்கள் இன்று இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் அடுத்த கட்டமாக கொஞ்சம் அறிவும், நல்ல சிந்தனையும், நடத்தையும் கற்றுக் கொள்வார்கள். முக்கியமானது என்னவென்றால் மக்களுக்கு சுதந்திரம் கிடைத்திருக்கிறது" என்று எல்லா ஏகாதிபத்தியங்களுக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் சொல்கிறார், போய்கோ. ஆம் சுதந்திரம் மக்களுக்கல்ல. ஏகாதிபத்தியக் கொள்கைக்கு. அதுபோதும் அவற்றுக்கு!

(தொடரும்)

## ஆயத்த ஆடை தொழிலாளர்கள் போராட்டம்

சென்னை அம்பத்தூர் தொழில் பேட்டையில் ஏ.ஐ. எண்டர்பிரைசஸ் என்ற ஆயத்த ஆடை மற்றும் தோல் பொருட்கள் ஏற்றுமதி நிறுவனம் சென்னையில் 13 இடங்களில் இயங்கி வருகிறது. தொழிலாளர்களுக்கு 300 ரூ. முதல் அதிகபட்சம் 900 ரூ. வரை அற்ப கூலி கொடுத்து சுரண்டி வருகிற இந்நிறுவனம், தொழிலாளர்கள் சங்கம் அமைத்ததை அங்கீகரிக்க மறுத்ததோடு சங்கம் அமைத்ததற்காக 175 பேரை வேலை நீக்கம் செய்தது. தொழிலாளர்களின் சிறு எதிர்ப்பைக் காரணம் காட்டி சட்ட விரோதமாக 21-9-95 அன்று கதவடைப்பு செய்து அனைவரையும் வீதியில் நிறுத்தியது.

ஏ.ஐ.சி.சி.டி.யு. என்ற சங்கத்தின் கீழ் திரண்டு போராடிய தொழிலாளர்கள் மீது போலீசை ஏவி தாக்குதல் தொடுத்தது. நிறுவனத்தில் திருட்டுப் போனதாகக் கூறி சங்க நிர்வாகிகளை 16-10-95 அன்று நள்ளிரவில் வீட்டில் போய் கைது செய்தது, அமைந்தகரை போலீசு. பின்னர் தொழிலாளர்கள் எதிர்ப்பினால் வழக்கின்றி விடுவித்தது. ஏ.ஐ.சி.சி.டி.யு. என்ற சங்கத் தலைவரான ஏ.எஸ். குமாரசாமியோ "வன்முறை வேண்டாம்; பொறுத்தார் பூமி ஆள்வார்" என்று சட்டபூர்வ நியாயம் பேசி, நாள் கடத்தி தொழிலாளர்களின் போர்க் குணத்தை மழுங்கடித்தார்.

நிர்வாகத்தினர் 30-10-95 அன்று போராடியவர்களை பேச்சு வார்த்தை என்றழைத்து திட்டி அவமானப்படுத்தியுள்ளனர். மேலாளர் சொக்கலிங்கம், பெண் தொழிலாளர்களின் சேலையைப் பிடித்து இழுத்தும், தாக்கியும் முறைகேடாக நடந்து கொண்டதால் கைகலப்பாகியுள்ளது. பின்னர், அம்பத்தூர் தொழிற்பேட்டை முதலாளிகளின் சங்க உதவியோடு நிர்வாகம் போலீசை ஏவி போராட்டத்தை ஒடுக்கி வருகிறது. போலிக் கம்யூனிஸ்டு தலைமையிலான இச்சங்கமோ 8-11-95 அன்று "பட்டினிப் போர்" என ஏற்கனவே வருமானமின்றி பட்டினிக் கிடப்பவர்களை மேலும் வாட்டி சவத்தனமாகப் போராடி வருகிறது.

"நான் சங்கத்தில் இல்லை" என்று அடிமை சாசனத்தில் கையெழுத்து கேட்டு வந்த நிர்வாகத்தினரை துரத்தியடித்து போர்க் குணத்துடன் போராடிய தொழிலாளர்கள் தலைமையின் துரோக வழிமுறையால் சோர்ந்து போய் சிதறிப் போனார்கள். பிற நிறுவனங்களுக்கு வேலைக்குப் போனவர்கள் போக சிறுபிரிவினரே இன்று போராடி வருகின்றனர். தொழிலாளர்கள் புரட்சிகர சங்கத் தலைமையின் கீழ் போர்க்குணமிக்க போராட்டங்களை பிற சங்கங்கள் - தொழிலாளர்களின் ஒத்துழைப்போடு முன்னெடுப்பதே முதல் தேவையாகியுள்ளது.

தகவல்: சமரேந்தி

## பழங்குடி ஊழியர்களின் பொது நோக்கு

கோவை மாவட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மத்திய - மாநில அரசு ஊழியர்கள் சங்கக் கவுன்சில் சார்பாக கொடியங்குளத்திலும், சென்னையிலும் தங்கள் இனச் சகோதர - சகோதரிகள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைத் தாக்குதலைக் கண்டித்து கடந்த அக்டோபர் மாதம் 19-ம் தேதி கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக கொள்கை முழக்கப் போராட்டமொன்று நடைபெற்றது. "இத்தாக்குதல் தொடர்பாக மத்திய புலனாய்வுத் துறை விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்; பொய் வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும்; - பாதிக்கப்பட்டோருக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும்" என்ற கோரிக்கைகளை முன் வைத்து இப்போராட்டத்தை இவ்வூழியர்கள் நடத்தினர். பல்வேறு மைய - மாநில பொதுத் துறை அலுவலகங்களைச் சேர்ந்த 150 ஊழியர்கள் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கவுன்சிலின் பொதுச் செயலாளர் டி. முத்துக்கிருஷ்ணன் இப்போராட்டத்தை ஏற்பாடு செய்து தலைமை தாங்கினார். தனம் கணபறிப்புச் சம்பவத்தின் போதும் இக்கவுன்சிலின் சார்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தொலைபேசி மூலம் தொல்லை கொடுக்கும் போராட்டம் அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டது. இப் போராட்டத்தில் கோவை ம.க.இ.க. தோழர்கள் கலந்து கொண்டு ஆதரவளித்தனர். கோவை மாவட்ட காலணித் தொழிலாளர்கள் நலச் சங்கத் தலைவர், T.N. செல்வராஜ், "கல்வியறிவு பெற்ற தாழ்த்தப்பட்டோர் கீழ் நிலையிலுள்ள தன் இன மக்களுக்கு உதவ எல்லா வகையிலும் முன் வரவேண்டும்" எனக் குறிப்பிட்டார். சங்கம் என்றாலே "ஊதிய உயர்வுக்காக மட்டுமே" என வரம்பிட்டுக் கொள்ளாமல், தமது பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் போராட முன் வந்த இவ்வூழியர்களின் இப்போராட்டம் வரவேற்கத் தக்கது; முன்னுதாரணமிக்கது.

தகவல்: ம.க.இ.க., கோவை

www.padippakam.com

# ரூபாய் மதிப்பு: கட்டெறும்பாகிறது கழுதை

**மைய அரசு ரூபாய் மதிப்பைக் குறைக்க வேண்டும் என்ற தனது எண்ணத்தைத் தந்திரமாகச் சாதித்துள்ளது.**

ஒரு நாட்டினது பொருளாதாரத்தின் வலிமையை சந்தையில் அதன் பணத்தின் மதிப்பை வைத்துத் தெரிந்து கொள்ளலாம். இந்த எளிமையான அளவுகோலைக் கொண்டு பார்க்கும் பொழுது இந்தியப் பொருளாதாரம் மரணப் படுக்கையில் விழுந்து போராடிக் கொண்டிருக்கிறது என்றே கூற வேண்டும்.

தாராளமயமாக்கலின் தொடக்கத்தில் அமெரிக்க டாலர் ஒன்றுக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு பதினெட்டு ரூபாயாகும். கடந்த அக்டோபர் மாத இறுதியிலோ இந்திய ரூபாயின் மதிப்பு ரூ. 35.90 ஆகச் சரிந்து விட்டது. செப்டம்பர் மாதத் துவக்கத்தில் ரூ. 31.37 ஆக இருந்த இந்திய ரூபாயின் மதிப்பு, கிட்டத்தட்ட 45 நாட்களுக்குள்ளாக 13 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆட்சியாளர்களின் அறிவிப்புகளுக்கு மாறாக பண வீக்கம், அன்றாட நுகர்வோரை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடும் பொழுது கடந்த இரண்டாண்டுகளாகவே பதினொரு சதவீதத்துக்கும் மேலாகவே இருந்து வருகிறது. மேலும் தாராளமயமாக்கலைத் தொடர்ந்து இறக்குமதியை ஈடு செய்யும் வண்ணம் ஏற்றுமதி அதிகரிக்காததால், வர்த்தகப் பற்றாக்குறையும் அதிகரித்த வண்ணமுள்ளது. இந்த இரு காரணங்களால் ரூபாயின் மதிப்பைக் குறைக்க வேண்டிய நிர்பந்தம் ஆட்சியாளர்களுக்கு எழுந்தது. ஆனால் அரசியல் காரணங்களுக்காக இதனைத் தவிர்த்தே வந்தது, ராவ் கும்பல்.

அதே சமயம் ரிசர்வ் வங்கியிலுள்ள தனது அந்நியச் செலாவணி கையிருப்பைக் கொண்டுதான் கடந்த இரண்டாண்டுகளாக ரூபாயின் மதிப்பு சந்தையின் மதிப்புக்கு இணையாக இறங்கி விடாதபடி (ரூ. 31.37 என்றளவில்) முட்டுக் கொடுத்து வந்தது, மைய அரசு. நமது நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பின் பெரும்பகுதி ஏற்றுமதியின் மூலமின்றி அந்நியக் கடன் மூலம் ஈட்டப்பட்டதாகும். எனவே, இவ்வருடத்தில் உள்நாட்டு பங்குச் சந்தையில் அந்நிய மூலதனம் பாய்வது குறையத் தொடங்கியதையடுத்தும், அந்நியக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலக்கெடு காரணமாகவும் சமீபத்தில் இம்முட்டுக் கொடுத்தல் கை கழுவப்பட்டது. இதன் காரணமாக பணச் சந்தையில் இறக்குமதியாளர்களின் தேவைக்கேற்றவாறு அமெரிக்க டாலர் கிடைக்காது பற்றாக்குறை ஏற்பட்டு, அதன் மதிப்பு உயர்ந்தது; இதனால் ரூபாயின் மதிப்பு சரியத் தொடங்கியது.

இவ்வீழ்ச்சி ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்வதாக அமையவே, ரூபாயின் மதிப்பு ரூ. 35.90 எனக் குறையும் வரை மைய அரசு இதனைத் தடுத்து நிறுத்த எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை; மேலும் ரூபாயின் மதிப்பு குறைந்து போயிருப்பதை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை. இதனால் ஏற்றுமதியாளர்கள் தாங்கள் ஈட்டும் அமெரிக்க டாலர் முழுவதையும் சந்தையின் மதிப்புக்கு ஈடாக அதிகாரப்பூர்வமாகவே வங்கிகளின் மூலம் மாற்றிக் கொள்ளும் வாய்ப்பினையும் ஏற்றுமதி வர்த்தக விதிகளுக்குப் புறம்பாக ஏற்படுத்தித் தந்துள்ளது, மைய அரசு.

நமது நாட்டின் பெருந் தொழில்துறை உற்பத்தி அந்நிய மூலதனம் - இயந்திரச் சாதனங்கள் - தொழில் நுட்பத்தைச் சார்ந்துதான் உள்ளது. எனவே, ரூபாயின் மதிப்பு குறைந்து போனதால் இவற்றின் இறக்குமதிக்குக் கூடுதலாகச் செலவு செய்ய வேண்டும். இதன் காரணமாக உற்பத்திச் செலவு அதிகமாகிப் பொருட்களின் விலை கூடுதலாகும். மேலும் உள்நாட்டின் தேவைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் உரம், பூச்சி மருந்து, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய், மருந்துப் பொருட்களின் விலையும் இனி அதிகமாகும்.



இவ்வாண்டில் ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தில் கிட்டத்தட்ட 400 கோடி அமெரிக்க டாலர் - அதாவது 14000 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்படும் என மதிப்பிடப்படுகிறது. எனவே, "ரூபாயின் மதிப்பு வீழ்ந்துள்ளதால், ஏற்றுமதி அதிகரிக்கும்" என்ற பொருளாதாரப் புலி மன்மோகன் சிங்கின் சூதாட்டக் கணக்கு பகற்கனவாகத்தான் முடியும். ரூபாயின் மதிப்பு வீழ்ந்துள்ள இந்நிலையில் இறக்குமதியைக் கட்டுப்படுத்த எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை; மாறாக, இறக்குமதி வாணிபத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகச் சூதாடிகள், கோடிக்கணக்கில் அமெரிக்க டாலரை வாங்கிப் பதுக்கி வைத்துக் கொள்வதுதான் அதிகரித்துள்ளது.

ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியினால், நாட்டில் அந்நியக் கடன் அதன் மதிப்பில் தானாக உயர்ந்து விடும்; இதனால் அக்கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு மைய அரசு கூடுதலாகச் செலவு செய்ய நேரும். மறுபுறம் அந்நிய மற்றும் உள்நாட்டு (தரகு) முதலாளித்துவ கும்பலின் நிர்பந்தத்துக்கு அடிபணிந்து இறக்குமதித் தீர்வைகள் குறைக்கப்படும்; இது வருமான இழப்புக்கு ஈட்டுச்சென்று நாட்டை அந்நியக் கடன் வலைக்குள் மீண்டும் நெட்டித் தள்ளும்.

"பண வீக்கம் ஒற்றை இலக்கத்தில் இருந்து வருவது, ஏற்றுமதி வளர்ச்சி, அந்நியச் செலாவணி கையிருப்பு அதிகரிப்பு" - இம்மூன்றையும்தான் ராவ் கும்பல் தனது சாதனைகளாகக் கூறி வருகிறது. ஆனால் ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி இச் 'சாதனை'களைக் கறிக்கு உதவாத சுரைக்காய்கள் என நிரூபித்து விட்டது. மாறாக, அரசின் தலையீடின்றி ரூபாயின் மதிப்பை சந்தை நிர்ணயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது; "அமெரிக்க டாலரை சந்தையின் மதிப்புக்கு ஏற்ப மாற்றிக் கொள்ள வசதியாக விதிகள் தளர்த்தப்படும்" என உலக வங்கிக்குக் கொடுத்திருந்த வாக்குறுதி அதிகாரப்பூர்வமற்ற வழியில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தற்பொழுது மைய அரசு தனது அந்நியச் செலாவணி கையிருப்பைக் கொண்டு பணத்தின் மதிப்பை ரூ. 34.90 என்ற அளவில் முட்டுக் கொடுத்து வந்தாலும், இது மேலும் வீழ்ந்து நாற்பது ரூபாயைத் தொடக்கூடும் என மதிப்பிடப்படுகிறது. அடுத்தடுத்து பணத்தின் மதிப்பு இப்படி சந்தையில் குறைந்து கொண்டே செல்வது, மெக்சிகோ போன்று நாடு திவாலாகும் அபாயகரமான நிலையை உருவாக்கக்கூடிய ஒன்றாகும்.

● ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com

# மே. வங்கத்தைப் பார்! கொலைகாரப் போலீசின் கூட்டாளிகள் யார்?

"அவன் கிடக்கிறான் குடிகாரன்; எனக்கு ஊத்து ரெண்டு மொந்தை கள்ளு!" என்கிற கதையாக இதர ஆட்சிகளின் போலீசுக் கொடுமையைச் சாடும் போலிக் கம்யூனிஸ்டுகள், தாங்கள் ஆளும் மே. வங்கத்தில் போலீசுக் கொட்டடிக் கொலைகளில் புதிய சாதனை படைத்து வருகிறார்கள். இந்தியாவிலேயே போலீசு கொட்டடிக் கொலைகளில் முதலிடம் வகிக்கும் மாநிலம், போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மே. வங்கம்தான்! 1977-ல் போலிகள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இன்று வரை நடந்துள்ள மொத்தக் கொலைகள் 278. 1995-ம் ஆண்டில் மட்டும் இதுவரை நடந்த கொலைகள் 26. இந்த உண்மைகளை தேசிய மனித உரிமைக் கமிஷன் அண்மையில் அம்பலப்படுத்தியுள்ளது.

1993-ம் ஆண்டு அக்டோபர் 30-ம் நாளன்று விக்டோரியா சணல் ஆலைத் தொழிலாளியான பீகாரி பஸ்வான், வேலை முடிந்து வீடு திரும்பாமல் மர்மமான முறையில் 'காணாமல்' போனார். நள்ளிரவில் அவரைக் கைது செய்து இழுத்துச் சென்றதற்கு சாட்சிகளும் ஆதாரங்களும் இருந்த போதிலும், மே. வங்க போலீசார் இதனை திட்டமிட்டே மூடி மறைத்தனர். இந்த விவகாரத்தை போலிக் கம்யூனிஸ்டு ஆட்சிக்கு எதிரான முக்கிய துருப்புச் சீட்டாகக் கொண்டு, எதிர்க்கட்சியான காங்கிரசு, விசாரணை கோரி போராட்டங்களை மேற்கொண்ட பிறகு, மத்திய புலனாய்வுத் துறை விசாரணையை மேற்கொண்டது. கடந்த ஜூன் இறுதியில் தனது அறிக்கையை வெளியிட்ட மத்தியப் புலனாய்வுத்துறை, பீகாரி பஸ்வான் போலீசாரால் கைது செய்யப்பட்டு கொடூரமான சித்திரவதைகளால் கொல்லப்பட்டதையும், கொலைகார போலீசின் கோர முகத்தையும் அம்பலப்படுத்திக் காட்டியது.

இதைத் தொடர்ந்து, கடந்த அக்டோபரில் தேசிய மனித உரிமைக் கமிஷனின் பிரதிநிதிகள் மே. வங்கத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கொட்டடிக் கொலைகள் பற்றிய விபரங்களைச் சேகரித்த போது, போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதி பாசு, போலீசுக் கொட்டடியில் எந்தவொரு விசாரணைக் கைதி இறந்தாலும், அந்தப் போலீசு நிலைய அதிகாரிகள்தான் பொறுப்பாவார்கள்; அவர்கள் உடனடியாகப் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்றெல்லாம் சவடால் அடித்தார்.

போலீசு கொலைகாரர்களுக்கு எதிராக ஜோதிபாசு விடுத்த எச்சரிக்கைகள் எல்லாம் வெற்று வாய்ச் சவடால்தான் என்பது அடுத்த சில நாட்களிலேயே சந்தி சிரித்தது. கடந்த அக். 24-ந் தேதியன்று கல்கத்தாவின் சிவப்பு விளக்குப் பகுதியில் சாராயம் விற்கும் சுபாஸ் தாஸ் என்பவன் சிறு திருட்டுக் குற்றத்திற்காக போலீசாரால் கைது செய்யப்பட்டு அடுத்த இரு நாட்களில் பிணமாகிப் போனான். அவனைக் கைது செய்யும் போதே மயங்கிய நிலையில் இருந்தான் என்றும் கொட்டடியில் இருந்தபோது மனநிலை சரியில்லாமல் சுவற்றில் முட்டிக் கொண்டு மயங்கி விழுந்தான் என்றும் முன்னுக்குப் பின் முரணாக போலீசார் வழக்கம் போலவே உளறத் தொடங்கினர்.

அடுத்தடுத்து நடக்கும் கொட்டடிக் கொலைகளைக் கண்டு வெகுண்டெழுந்து தன்னெழுச்சியாக மக்கள் போராடத் தொடங்கியதும், பீதியடைந்த போலிகளின் அரசு, சுபாஷ் தாஸ் கொலைக்குக் காரணமான போவானிபூர் போலீசு நிலையத்தைச் சேர்ந்த இரு போலீசுக்காரன்களை தற்காலிக பணி நீக்கம் செய்துள்ளது. ஆனால் தலைமை ஆய்வாளரான காடிதேவ்-க்கு விளக்கம் கோரும் நோட்டீசுதான் தரப்பட்டுள்ளது. அவர் மீது தண்டனையோ, நடவடிக்கையோ எதுவுமில்லை. ஏனெனில், அவர் ஜோதிபாசுவின் முதலாளித்துவ செல்ல மகனாகிய சந்தன்பாசுவுக்கு மிகவும் நெருக்கமானவராம்!

மே. வங்கத்தில் காங்கிரசின் அவசர நிலை பாசிச ஆட்சியின் போது 1971-லிருந்து 76 வரை போலீசு கொட்டடியில் 67 பேர் கொல்லப்பட்டனர். இக்கொடுமைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து 1977-ல் ஆட்சிக்கு வந்த போலிகள், அக்கொலைகார போலீசுக்காரர்கள் மீது இன்று வரை விசாரணையோ, தண்டனையோ மேற்கொள்ளவில்லை. மாறாக, கொலை வெறிபிடித்த போலீசாரோடு கைகோர்த்துக் கொண்டு காங்கிரசு பாசிச ஆட்சிக்கு சற்றும் குறையாமல் கொட்டடிக் கொலைகளைத் தீவிரப்படுத்தியே வந்துள்ளனர். அதுமட்டுமல்ல; தமது ஆட்சியில் எந்தவொரு போலீசு கொலைகாரன் மீதும் நடவடிக்கை எடுத்ததில்லை. கொட்டடிக் கொலைகள் பற்றிய விசாரணைக் கமிஷன் அறிக்கையையும் பகிரங்கமாக வெளியிட்டதுமில்லை.

தமிழகத்தில், சிதம்பரம் - அண்ணாமலை நகர் பத்மினியின் மீதான போலீசாரின் பாலியல் வன்முறை, மற்றும் வாச்சாத்தி, சின்னாம்பதியில் போலீசார் நடத்திய கும்பல் கற்பழிப்பு - வெறியாட்டங்களுக்கு எதிராக இப்போலிகள் போர்க்கொடி தூக்கினர். இன்றும் கூட பாசிச ஜெயா அரசுக்கு எதிரான முக்கிய குற்றச்சாட்டாக போலீசு அக்கிரமங்களைப் பட்டியலிடுகின்றனர். ஆனால் தாங்கள் ஆளும் மாநிலத்தில் நடக்கும் போலீசு கொலை வெறியாட்டங்கள் அம்பலமான பிறகும்கூட மேல்வாயையும் கீழ்வாயையும் மூடிக் கொண்டு மவுனம் சாதிக்கின்றனர்.

இதுதான் போலீசு கொடுமைகளுக்கு எதிராக நிற்கும் போலிக் கம்யூனிஸ்டுகளின் லட்சணம்! "மே. வங்கத்தைப் பார்! போலீசாரைப் பொது மக்களின் நண்பனாக மாற்றிவிட்டோம்!" என்று சவடால் அடிக்கும் போலிகளின் யோக்கியதை இதுதான்!

போலிக் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வருவதால், அடக்குமுறை அரசு எந்திரத்தின் முக்கிய அங்கமாக உள்ள, வன்முறைக் கும்பலான போலீசை சைவப்புலியாக மாற்றிவிட முடியாது; கொலைகார போலீசு கும்பலோடு கைகோர்த்துக் கொண்டு அதன் கோரமுகத்தை மூடி மறைத்து வரும் போலிக் கம்யூனிஸ்டுகள், சமூக பாசிஸ்டுகளாகச் சீரழிவதை இனி தடுக்கவும் இயலாது - இந்த உண்மைகளை மே. வங்கத்தில் தொடரும் கொட்டடிக் கொலைகள் நிரூபித்துக் காட்டி விட்டது.

• குமார்

கொட்டடிக் கொலைகளுக்கு எதிராக நக்சல்பாரி அமைப்பினர்




படிப்பகம்

Published and owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalingam Nagar, Madras - 600 083

www.padippakam.com



**நா**டும் மக்களும் நலமாய் வாழ என்ன செய்யலாம்? பாத யாத்திரை செல்வார்கள் சிலர்; வேள்வித் தீயில் நெய்யை அள்ளிக் கொட்டினால் போதும் என்பார்கள் மற்றொரு பிரிவினர். இதோ இப்படத்திலுள்ள பார்ப்பன பூசாரிகள் உலக மக்கள் அனைவரும் நலமாக வாழ்வதற்கு கல்லால் ஆன சிவலிங்கத்திற்கு அன்ன அபிஷேகம் செய்கிறார்கள். இரண்டரை லட்ச ரூபாய் செலவில் 25 மூட்டை அரிசியைப் பொங்கி வடித்து, இக்கூத்து கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயிலில் நடந்து முடிந்தது. ''மூடத்தனம்'', ''ஏமாற்றுவித்தை'', ''வீண் விரயம்'' - என இப்படி பல வாறு எண்ணங்கள் தோன்றலாம். ஆனால் ஓடுகாலி காஞ்சி சங்கராச்சாரிக்கு அப்படித் தோன்றவில்லை; காரணம் அவரின் களிமண் மண்டைக்குள் தான் இந்த 'முத்தான' யோசனை உதித்தது.





## இதுதான் இன்றைய இந்தியா

இதோ வேதங்கள் ஆளும் நாட்டின் வேதனையான காட்சி. கல்யாண சத்திரங்களைக் கடந்து செல்லும் யாரும் இந்த அவலத்தைப் பார்க்காமல் போக முடியாது. நாயோடும் பன்றியோடும் போட்டி போட்டுக்கொண்டு எச்சில் இலையில் மிச்சமிருப்பதை வழித்துத் திண்ணும் கேவலமான வாழ்வைத்தான் '**சுதந்திரம்**' பரிசாகத் தந்துள்ளது. ஈ மொய்த்தாலும் மண் ஒட்டியிருந்தாலும் அது அச்சிறுமியின் முகத்தில் சுளிப்பை ஏற்படுத்தவில்லை. வயிற்றைக் கிள்ளும் பசியோடு நடைபாதை ஓரத்தில் சுருண்டு படுத்துக் கிடப்பதைவிட இதுமேலானது என்ற எண்ணம்தான் அவளது மலர்ச்சிக்குக் காரணம்.

பூசை, சடங்கு, சம்பிரதாயம் என்ற போதையில் மக்களை ஆழ்த்திச் சுரண்டும் ஆதிக்கக் கும்பலுக்கு சேவை புரிகிற பூணூல்கள் ஒருபுறம்; அடுத்த வேளை சோற்றுக்கே நகரத்துக் குப்பைத் தொட்டிகளைத் தேடி ஓடும் உதிரித் தொழிலாளர்கள் மறுபுறம். இந்த அநீதிக்கு நாம் முடிவுரை எழுதுவது எப்போது?

படிப்பகம்